Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 21 (16.12.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :77

## அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வுகண்டு

# சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க

# அகாஷி அடுத்த மாதம் கொழும்பு வருகிறார்!



விசேட தூதுவர் யசூஷி அகாஷி

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலையை முடிவுக்குக் கொண்டுவந்து, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சை முன்னெடுக்கும் நோக்குடன் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி அடுத்த மாத நடுப்பகுதியில் கொழும்புக்கு வரவுள்ளார்.**

அகாஷியின் கொழும்பு விஜயத்தை உறுதிப்படுத்திய வெளிநாட்டமைச்சு அதிகாரிகள், அடுத்த மாதம் எத்தனையாம் திகதி அவர் இங்கு வருவார் என்பது குறித்து இதுவரை தமக்குத் தகவல் கிடைக்கவில்லையென தெரிவித்தனர்.

கடந்த ஜூன் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் ஜப்பானில் வழங்கப்பட்ட 4.5 பில்லியன் நிதியை புனரமைப்புப் பணிகளுக்கு பயன்படுத்த அனுமதி வழங்கலாமா என்பது குறித்தும் இலங்கை வரும் அகாஷி ஆராய்வார்.

கொழும்பு வரும் அகாஷி - ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில், சமாதானப் பேச்சுக்களில் முக்கியமாகச் செயற்படும் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இவர்களைச் சந்தித்த பின்னர் வன்னி செல்லும் அகாஷி, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன், கிழக்கு மாகாணத்திற்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் காலிழப்பு!

(சாவகச்சேரி)

படையினரின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது வளவொன்றைத் துப்பரவு செய்த ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது காலொன்றை முழங்காலுக்குக் கீழ் இழந்துள்ள சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சிவன்கோயிலடியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவரான எஸ்.அருணாசலம் (வயது 58) என்பவரே இடதுகாலை முழங்காலுக்கு கீழே இழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - கடந்த சனிக்கிழமை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணும் நேற்றைய பேச்சுக்களும் தோல்வியில்!

## விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறும் சாத்தியம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்ட மனோ - மலிக் குழுவினரின் சந்திப்பு - எந்தத் தீர்மானமும் இன்றி நேற்று முடிவடைந்தது.

பாதுகாப்புத்துறை உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்ததையடுத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அரசியல் நெருக்கடிநிலை உருவாகியது.

இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு இருவரினதும் செயலாளர்களான மனோதித்தவெல, மலிக் சமரவிக்கிரம ஆகிய இருவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, இந்தக் குழு 6 தடவைகள் சந்தித்து பேச்சு நடத்தியும் எந்தத் தீர்மானமும் எட்டப்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை முகாம்களை அகற்றுவதற்கு இணக்கம்!

(அம்பாறை)

திருக்கோயில் வைத்தியசாலைக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிரடிப்படைமுகாம், காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் ஆகிய இரண்டையும் அகற்றுவதற்கு அதிரடிப்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவலை கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் கிறிஸ்ரோ உசான தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மணிராசன்குள முகாமை அகற்ற ஜனாதிபதி என்ன நடவடிக்கை எடுத்தார்?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சை பொறுப்பெடுத்த பின்னரும் விடுதலைப் புலிகள் தமது மணிராசன்குளம் முகாமைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளனர். இதற்கெதிராக என்ன நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டாரென காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பெடுத்த பின்னர் விடுதலைப் புலிகளின் மணியரசன்குள முகாம் தொடர்பாக எதுவும் பேசாமல் மௌனமாக உள்ளார். முன்னர் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திலக் மாரப்பனவிற்கு ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் இந்த முகாம் தொடர்பாக சில தினங்களில் விசாரணை நடத்தி தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். பின்னர் நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பெடுத்ததாக அவர் கூறினார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்த பின்னர் விடுதலைப் புலிகளின் மணிராசன்குள முகாமை அகற்றுவதற்கு ஜனாதிபதி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் இது தொடர்பில் மௌனமாக இருக்கிறார். தற்போது அவர் வேறுபட்ட நிலைப்பாட்டில் உள்ளார்.

விடுதலைப் புலிகளது யுத்தநிறுத்த நடவடிக்கையை எதிர்த்து ஜே.வி.பியும், சிஹல உறுமயவும் சேர்ந்து தலைமை தாங்கி ஆர்ப்

(10 ஆம் பக்கம் பார்க்க)





## ஆயிரத்து ஐந்நூறு பட்டதாரிகளுக்கு அடுத்த வருடம் ஆசிரியர் நியமனம்!

### கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயிரத்து ஐந்நூறு பட்டதாரிகளுக்கு அடுத்த வருடம் ஆசிரிய சேவையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் நாடாளுமன்றத்தில் மேலும் பேசுகையில்,

வருடத்தின் மத்திய பகுதியில் ஓய்வுபெறும் ஆசிரியர்களால் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே, மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் ஓய்வுபெறும் திகதியை வருட இறுதிவரை நீடிப்புச்செய்ய அரசாங்கம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் செல்ல வைகோவுக்கு அனுமதி!

(சென்னை)

நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு - பொடா சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகச் செயலாளர் வைகோவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

பொடா சட்டத்தில் திருத்தம் கொண்டுவரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - பெருங்குளம் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதிக்கொண்ட விபத்துச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த செ.ஞானப்பிரகாசம் (வயது 43) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (29)

EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)

எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# தமிழ்மக்கள் சட்டரீதியாக அரசியல் உரிமையை பெற இந்தியா வெளிநாட்டுக் கொள்கையை மாற்றவேண்டும்

## சமாதான நீதிவான்கள் சங்கம் வாஜ்பாயிடம் கோரிக்கை

இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் செய்து, தமிழ்மக்கள் சட்டரீதியாக அரசியல் உரிமையை பெறுவதற்கு உதவ வேண்டும்.

இவ்வாறு, யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் இந்திய அரசைக் கோரியுள்ளது.

இந்த விடயம் குறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பிவைத்த மகஜரில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைவாழ் தமிழ்மக்கள் இந்தியாவை தமது தாய்நாடாகக் கொண்ட ஆயிரத்தொரு வருடக் கணக்கான வருடங்களை உடைய இரத்த உறவுகொண்டவர்கள். இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை தமது தாய் நாடாக நம்பினார்கள். அந்நியர் ஆட்சியலிருந்து இந்தியாவும், இலங்கையும் சுதந்திரம் அடைந்தபின்பு, சிங்கள சமூகம் - இந்தியாவை தமது தாய்நாடாக ஏற்கமறுத்தபோதும், இந்தியாவை இலங்கைவாழ் தமிழர்கள் - தமது தாய்நாடாக ஏற்று, அரசியல் களத்தில் நடந்துவந்தமை தாங்கள் அறிந்ததே. அதன் விளைவாக, தாங்கள் தமிழர்கள் அரசியல் பிரச்சினைகளில் பல சந்தர்ப்பங்களில் ஈடுபட்டும், மேலும் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகம் என ஏற்று, ஒரு நிர்வாகக் கட்டமைப்பு அமைத்தமைக்கும் நன்றி கூறுகிறோம்.

இலங்கை சுதந்திரம் அடைந்த போது, வடக்கு - கிழக்கில் தமிழர்கள் கூடிய பெரும்பான்மையாகவும், அவர்கள் அதிகாரத்தின் கீழ் இந்த இரு பகுதிகளும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. சுதந்திரத்தின் பின் நாடாளுமன்ற பெரும்பான்மைப் பலத்தை அதாவது ஜனநாயகத்தின் குறைபாட்டை சிங்கள அரசியல்வாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இனத்துவேஷம் வளர்த்து, பலவந்தமாக குடியேற்றங்ளைச் செய்து, நாட்டில் 1956,1977,1983 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரங்களை உண்டுபண்ணி, தமிழர்களை இலங்கையின் இரண்டாம் தரப்பிரஜைகளாக்க சகலவிதமான முயற்சிகளும், சகிக்கமுடியாத கொடுமைகளும் செய்தார்கள்.

ஜனநாயகத்தின் இந்தக் கொடுமைகளைச் சகிக்கமுடியாத தமிழ் இளைஞர்கள் - ஆயுதம் ஏந்திப் போராட பலவந்தப்படுத்தப்பட்டார்கள். வேறுவிதமாகக் கூறுவதானால், ஆயுத விடுதலைப்போர் சிங்கள அரசியல்வாதிகளால் - தமிழ் சமூகத்திற்குத் திணிக்கப்பட்டது. இதன் விளைவு இந்திய அமைதிப்படை வருகையை உண்டுபண்ணியது. இந்த விடுதலைப் போராட்டம், தமிழ்-சிங்களப் போரிற்கு இலங்கையுள் சமாதானத் தீர்வுகாண இரு பகுதியும் முற்படவைத்தது. முதல் கட்டமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், தற்பொழுது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நோர்வே அரசின் அனுசரணையுடன் புலிகளுடன் இரண்டு வருடங்களாக பேச்சு நடைபெற்று ஒரு இறுதித் தீர்வு காண முயற்சிக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகார அரசியல் யாப்பைக்காட்டி மூன்று மந்திரிப் பதவிகளைப் பறித்தமையால் சமாதானப் பேச்சுக்கள் முறிக்கப்பட்டும், நோர்வே அனுசரணையாளர்கள் சமாதானப் பேச்சிலிருந்து விலகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது அரசியல் சண்டை பிரதமரா, ஜனாதிபதியா சமாதானப் பேச்சுக்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பு என்பதே.

இந்த நிலையில் பின்வருவன கவனிக்கப்படவேண்டியதே. இலங்கையில் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்புக்கள் எல்லாம் தமிழர்கள் பங்களிப்பு இல்லாமல் சிங்கள சமூகத்தின் நன்மையை மையமாக வைத்து சிங்களப் பெரும்பான்மையால் தமிழர்களையும் ஏனைய சமூகத்தவரையும் முற்றாகப் புறக்கணித்து தயாரிக்கப்பட்டவையே.

இந்தநிலையில், இலங்கையில் ஆட்சிசெய்த இரு பிரதான கட்சிகளும் தமது அரசியல் காய்களை நகர்த்தினார்கள். இலங்கைப் பிரச்சினையை சர்தேச பின்னணியில் போடுவதற்கும் அயல் நாடான இந்திய வல்லரசை தமது வலையுள் போட்டு இலங்கைத் தமிழர் ஏக பிரதிநிதியாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால வடக்கு - கிழக்கு தன்னாட்சி அதிகாரசபையை கொச்சைப்படுத்த இந்திய இளைப்பாறிய அதிகாரிகளைப் பாவிக்க முயல்வதில் மிகவும் வேதனையடைகின்றோம். மேலும், இந்திய அரசியல் அதிகாரிகள் தமிழ் பேசும் இலங்கை மக்களது அரசியல் அபிலாஷைகளை ஆமோதித்து பல காலமாக இருக்கையில், தற்பொழுது இளைப்பாறிய இந்த அதிகாரிகளின் உக்கிரமான எதிர்க்கருத்தை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கொண்டுள்ளதாக குறிப்பிட்டது எதிர்மாறானதே.

இலங்கைத் தமிழர்களாகிய நாம் இந்தியாவை எமது தாயகமாக நேசிக்கின்றோம். எங்கள் இரத்த உறவுகளான ஆறு கோடி தமிழ்மக்கள் அங்கு வாழ்கிறார்கள் என்பதால் உரிமையுடன் கோருகின்றோம். என்றும் இந்தியாவை எங்கள் பாதுகாவலனாகவும், நல்ல வைத்தியனாகவும் கருதுகின்றோம். தமிழர்களாகிய நாம் என்றும் இந்தியாவின் நலனுக்கும், பொருளாதார நலனுக்கும், உலக அரசியல் நலனுக்கும் உறுதுணையாக இருப்போம் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

எமது விடுதலைப் போராட்டத்தினால் - எங்களது சகல உரிமைகளையும் பெறுவதற்கு இதுவே எமது கடைசிச் சந்தர்ப்பமாக இருப்பதால், தங்கள் வெளிநாட்டுக் கொள்கைகளில் தேவையான மாற்றங்களைச் செய்து தமிழ்மக்களின் சட்டரீதியான அரசியல் உரிமைகளைப் பெற ஆவன செய்வீர்கள் என நாங்கள் ஆணித்தரமாக நம்புகிறோம். மேலும் எங்கள் நோக்கம் நிறைவேற தங்கள் நல்ல அணுகுமுறை எங்கள் சார்பாக அமையவேண்டுமெனவும் வேண்டுகின்றோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் இந்திய அணிக்கு வெற்றிவாய்ப்பு!



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் அடிலெய்டில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டமான நேற்று, இந்திய அணி வெற்றி பெறுவதற்கு 192 ஓட்டங்கள் இருக்கும் நிலையில் நேற்றைய ஆட்டம் நிறைவடைந்தது.

முன்னதாக, மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 477 ஓட்ட எண்ணிக்கையுடன் ஆட்டத்தை நேற்றுத் தொடர்ந்த இந்திய அணி 523 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் ராவிட் மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 233 ஓட்டங்களைப் பெற்றார்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் பிச்சல் 4 விக்கெட்டுக்களையும், மக்கில், ஹற்றிக் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ஜிலெஸ்பி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் இரண்டாவது இன்னிங்சைத் தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, மிகவும் குறைந்தளவான 196 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணித்தலைவர் ஸ்ரீவ்வோ, கில்கிறிஸ்ட், மார்ட்டின் ஆகியோர் முறையே 42, 43, 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய பந்து வீச்சாளர்களில் அகர்கர் மிகச்சிறப்பாக பந்துவீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதனைவிட டெண்டுல்கர் இரண்டு விக்கெட்டுக்களையும், கும்ளே, ஹெர்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

230 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கிய இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 37 ஓட்டங்களை ஆட்டநேர நிறைவின்போது பெற்றிருந்தது.

# வீடமைப்புக் கடன்கள் மீண்டும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும்

## முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தகவல்

வீடமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்படும் வீடமைப்புக் கடன்கள் மீண்டும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும் என, யாழ்.பிராந்திய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டின் இறுதி மாதமாதலால், இம்மாதத்தில் இக்கடன் திட்டங்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடன் தொகையின் விபரங்கள் மற்றும் அறவீடுகள் சம்பந்தமான கணக்கு விபரங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜனவரி முதல் - மீண்டும் இக்கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதுவரைகாலமும் 50 ஆயிரம் ரூபாவே கடன் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுவந்தன. எனினும், ஜனவரி மாதம் முதல் ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கான அனுமதியை வீடமைப்பு அதிகார சபையின் கொழும்பு அலுவலகத்திடம் கேட்டுள்ளோம். அனுமதி வழங்கப்பட்டால், ஒரு லட்சம் ரூபா கடன் வழங்கும் நடவடிக்கை - எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

சூழல்பாதுகாப்பு உரிமம் வழங்கல் மற்றும் தீர்மானம் எடுத்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று, இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனையில் நடைபெறவுள்ளது.


**ராஜா** யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த

**எனக்கு 20 உனக்கு 18**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1847)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், கிரண் நடித்த

**தென்னவன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

JACKIECHAN நடித்த

**"WHO AM I"** (கராட்டிப் படம்) (சி-1846)


# சாவகச்சேரி நகரசபை

## 01.01.2004 முதல் 31.12.2004 வரை

## சந்தை/இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 24.12.2003
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 26.12.2003
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 29.12.2003 காலை 10.00

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1 | சாவகச்சேரி பொதுச்சந்தை | 1,000,000.00 | 5,000.00 | 200.00 |
| 2 | சாவகச்சேரி மீன் சந்தை. | 160,000.00 | 1,000.00 | 200.00 |
| 3 | சாவகச்சேரி இறைச்சிக்கடை இல. NMS III | 90,000.00 | 1,000.00 | 200.00 |
| 4 | சாவகச்சேரி ஆட்டிறைச்சிக்கடை இல. NMS I | 90,000.00 | 1,000.00 | 200.00 |

**குறிப்பு**

- இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விடுக்கப்படும் மாதவாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட VAT (20%) மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவரவேண்டும்.
- கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 20% VAT வரி செலுத்தப்படவேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

மு.செ.சரவணபவ,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 12.12.2003

(சி-1891)

# நல்லூர் பிரதேச சபை

## மீள் கேள்வி அறிவித்தல் 2004

01.01.2004 ம் திகதி முதல் 31.12.2004 ம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவீர்ந்த) |
|---|---|---|---|
| 1. கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 500.00 | 5,000.00 | 1,75,509.00 |
| 2. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |
| 3. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 52,500.00 |

- கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி 22.12.2003 திங்கள் 12.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 23.12.2003 செவ்வாய் 10.00 மணிவரை
- கேள்வி திறக்கும் திகதி 23.12.2003 செவ்வாய் 2.00 மணிவரை

மேலதிக விபரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேசசபை உப அலுவலகங்களிலும் பிரதேசசபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
15.12.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(சி-1893)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

# பொதுத் தேர்தலை நடத்துவதற்கு இப்போதைக்கு எண்ணம் இல்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தும் எண்ணம் - இப்போதைக்குத் தனக்கு இல்லை என, ஜே.வி.பி. தலைவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுக்களின்போதே, ஜனாதிபதி தனது இந்த நிலைப்பாட்டை ஜே.வி.பியினருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

முதலில் மாகாணசபைத் தேர்தல் ஒன்றை நடாத்தி, அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடாத்துவதே தனது நோக்கம் என, ஜே.வி.பி, சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி விளக்கியுள்ளார்.

ஆனாலும், உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் ஒன்றை நடாத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே, ஜே.வி.பி. தொடர்ந்தும் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருதரப்புக் கூட்டமைப்புத் தொடர்பாக, சுதந்திரக் கட்சி சமர்ப்பித்த புரிந்துணர்வு உடன்படிக்கையைப் பரிசீலித்து, தமது திருத்தங்களையும் சேர்த்துள்ள ஜே.வி.பி, இரண்டு கட்சிகளும் இணைந்து அமைக்கவிருக்கும் ஆட்சியொன்று குறித்தே, தமது யோசனைகளில் அதிகம் கவனம் செலுத்தியிருக்கின்றது.

ஜே.வி.பியின் திட்டத்தின்படி, புதிய கூட்டரசாங்கத்தில், ஜே.வி.பிக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளும், 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் போட்டியேதுமின்றி இருக்க வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் திட்டப்படி - அரசொன்று அமைக்கப்பட வேண்டுமானால், நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டிய சூழ்நிலையே ஏற்படும்.

ஆனாலும், தற்போது தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க அஞ்சும் ஜனாதிபதி, முதலில் மாகாண சபைத் தேர்தலை நடாத்தி, மக்கள் மத்தியில் தமக்கிருக்கும் செல்வாக்கை பரீட்சித்துப் பார்க்கவே விரும்புவதாகத் தெரிகிறது.

இத்தகைய முரண்பட்ட நிலைப்பாடுகள் காரணமாக, ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே - அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கூட்டமைப்பு முயற்சிகள் மேலும் பின்போடப்படும் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பன கூட்டமைப்பு யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் விளக்கம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாலியபுர பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

அனுராதபுரம் - சாலியபுர பகுதியில் வீடொன்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் படையினரால் மீட்கப்பட்டன.

நேற்று முன்தினம் அதிகாலை வீடொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டமை தொடர்பாக, விசாரிக்கச்சென்ற பொலிஸார், அந்த வீட்டினைச் சோதனையிட்டபோதே இந்த வெடிபொருட்களை மீட்டுள்ளார்கள்.

இந்த வெடிபொருட்கள் - சாலியபுர இராணுவமுகாம் ஒன்றிலுள்ள கிணறொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்திருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளை நடாத்திய பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இங்கிருந்து 36 மோட்டார்க் குண்டுகள், மற்றும் துப்பாக்கி முதலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (01)

# சந்திரிகா பங்கேற்கும் கூட்டங்களில் இனிமேல் பங்கேற்கப்போவதில்லை

## ஏ.எச்.எம்.பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பங்கேற்கும் எந்தவொரு கூட்டத்திலும், இனிமேல் தான் பங்கேற்கப்போவதில்லை என, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

கட்சியின் கொழும்பு மத்தி அமைப்பாளர் என்கின்ற தனது பதவியை, மீளவும் தன்னிடம் ஜனாதிபதி கையளிக்காத வரையில், தான் இந்த நிலைப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேர்வின் சில்வாவும், தானும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மத்தி அமைப்பாளர்களாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில், திடீரென முன்னறிவித்தல் எதுவுமின்றி, ஹனீபா ஐசாக் என்பவர் கொழும்பு மத்தி அமைப்பாளராக, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஏ.எச்.எம்.பௌசி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு - தனக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதுகுறித்து ஜனாதிபதி தனக்கு முன்கூட்டியே அறியத் தந்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கருத்துவெளியிட்டுள்ளார்.

# மனித உரிமை ஆணைக்குழு முன்பாக பதில் பொலிஸ் மா அதிபர் ஆஜராவார்

நாட்டின் பல்வேறு பகுதிகளில்- கடந்த ஆறுமாதகாலமாக, பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்ற சித்திரவதைக்ள் தொடர்பாக விசாரணையைச் சந்திப்பதற்குப் பதில் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா, கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கவுள்ளார்.

கடந்த ஆறுமாதகாலப் பகுதியில் பொலிஸ் நிலையங்களில் நான்கு கைதிகள் கொலைசெய்யப்பட்டமை மற்றும் சித்திரவதைகள் காரணமாக, பொதுமக்கள் - அடிப்படை மனித உரிமைமீறல் தொடர்பாக ஆணைக்குழுவில் முறையிட்டிருந்தனர். இது தொடர்பான விசாரணைக்கு முகங்கொடுக்கவே, இவர் கொழும்பு மனித உரிமை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகவுள்ளார். (01)

### உலகின் முதற்பெண் பிரதமர்

# சிறிமாவோவின் கார் ஏலத்தில் விடப்பட்டது

(கொழும்பு)

உலகின் முதற் பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் பயன்படுத்தப்பட்ட அதிகாரபூர்வ கார்களில் ஒன்று - கடந்த சனிக்கிழமை பிரதமர் அலுவலகத்தினால் ஏலத்தில் விற்கப்பட்டது.

வெள்ளைநிற வொல்வோ ரகத்தைச் சேர்ந்த இந்தக் கார் 1993 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டுமுதல் இறக்கும வரை இந்தக் காரை சிறிமாவோ பண்டாரநாயக்க பயன்படுத்தியிருந்தார்.

இந்தக்கார் ஏலத்தில் விடப்பட்டபோது, பதுளையைச் சேர்ந்த கிருசாந்த குணசேகர என்ற வர்த்தகர் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயன் பொத்தமின் வன்னி வருகைக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தடை!

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மற்றும் நேர்முகவர்ணனையாளர் அமைப்பு என்பவற்றின் தலையீடு காரணமாக, இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் - இயன் பொத்தமின் வன்னி வருகை பிற்போடப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தற்போது இலங்கை வந்துள்ள இயன் பொத்தம்- வன்னிக்கு வருவதற்கும் விருப்பம் தெரிவித்தார். இதற்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும், நேர்முக வர்ணனையாளர் சங்கமும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

அத்துடன், தமது அனுமதியின்றி - இயன் பொத்தம் வன்னி செல்லமுடியாதெனவும், வேண்டுமாக இருந்தால், மீண்டும் இங்கிலாந்து சென்று பின்னர் தனிப்பட்ட விஜயமாக வன்னிக்குச் செல்ல முடியுமெனவும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதனால், தற்போது தனது வன்னி விஜயம் தடைப்பட்டதாகவும், தான் மீண்டும் இங்கிலாந்து சென்று அதன் பின்னர் தனிப்பட்ட விஜயமாக வன்னி வரவுள்ளதாகவும் இயன் பொத்தம் தெரிவித்தார்.

வன்னியில் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பன தொடர்பாக ஆராய்வதற்காகவே இயன்பொத்தம் வன்னி வரவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆனந்தசங்கரி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அங்கீகாரம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி மீது மேற்கொள்ளப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, அக்கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை ஏகமனதாக அங்கீகரித்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் கூட்டத்திலேயே, இத்தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அதேவேளை, இத்தீர்மானத்திற்கு முரணாக முன்வைக்கப்படும் எந்தத் தீர்மானத்தினையும் நிராகரிப்பதாகவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 3 கிலோ போதைவஸ்து மன்னார் பஸ்ஸில் மீட்பு

மன்னாரில் இருந்து கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிச்சென்ற வட பிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்திலிருந்து, 3 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் அதிகாலை கொழும்பு மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் - இந்தப் பேருந்தின் சாரதியும், மற்றொருவரும் - கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதான முதலாவது பேக்குவரத்துப் பேருந்தின் சாரதி இவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# பொலிஸ் மா அதிபர் நியமனம் குறித்து அரசியலமைப்புச் சபை விவாதிக்கும்!

பொலிஸ்மா அதிபராயிருந்த ரீ.ஈ. ஆனந்தராஜா பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு, இரண்டு மாதங்களாக நிரந்தர பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படாதிருப்பது குறித்து, எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசியல் அமைப்புச்சபைக் கூட்டத்தில் ஆராயவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டத்தில் - பொலிஸ் மா அதிபராக நியமிக்கப் பொருத்தமானவரை, பிரதிப்பொலிஸ் மா அதிபர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்வதற்காக சிபார்சு செய்வதற்கு குழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் சந்திரா பெர்னாண்டோ, இந்திர டி சில்வா, காமினி ரந்தெனிய, ஜெய திஸ்ஸ ஹேரத், சிறிசேன ஹேரத் ஆகியோரை - இந்தப் பதவிக்குப் பெருத்தமானவர்களாக உள்ளதாக, அரசியல் அமைப்புச் சபைக்கு அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பெயரைச் சிபார்சு செய திருந்தார். ஆனால் அரசியலமைப்பு சபை - இந்திர டி சில்வாவை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இதையடுத்து, இரண்டாவது தடவையாகவும் இந்திர டி சில்வாவின் பெயரை ஜனாதிபதி சந்திரிகா சிபார்சு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





பிரான்ஸில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வுகளின் போது - தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும், விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் கல்லறையின் மாதிரிகளை இரண்டாவது படத்திலும் காணலாம்

# இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவதை சர்வதேச நாடுகள் இடைநிறுத்தவேண்டும்

## அமெரிக்க இராஜாங்கத்திணைக்கள அதிகாரியிடம் கோரிக்கை

சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளவேளையில், உலகநாடுகள் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்குவது - தமிழர்கள் அழிக்கப்படுவதற்கே பயனபடும் என்பதால், இந்த இராணுவ உதவிகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தில் இந்திய, இலங்கை, நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகள் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் நிக்கலஸ் டீனிடம் - யாழ். மாவட்ட பிரமுகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரானலி வீதியில் அமைந்துள்ள உணவகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே, இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவர்களது வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கை இன்னமும் உருவாகவில்லை. இராணுவத்தினரின் ஆதிக்கமே மேலோங்கி காணப்படுகின்றது. இதற்குச் சான்றாகக் கடந்த மூன்று நாட்களுக்கு முன் இருவர் யாழ். பஸ்நிலையப் பகுதியில் இராணுவத்தால் சுடப்பட்டு, காயப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் மிகமுக்கிய மூன்று அமைச்சுக்களான - பாதுகாப்பு, ஊடகத்துறை, உள்துறை என்பன பொறுப்பேற்கப்பட்டமை - தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், சமாதான நடவடிக்கைகள்மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

தெற்கில் இடமபெறுவதுபோல், சரியானமுறையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் இன்னமும் யாழ். மாவட்டத்தில் இடம்பெறவில்லை. அரசின் நிர்வாக இயந்திரம் சீரில்லை. வடக்கு - கிழக்கில் தமிழரின் நிர்வாகம் நடக்கவேண்டும். அப்போதுதான் தமிழருக்கான சுயகௌரவம் பேணப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனக்கூறுவது பொய்யென்பது, சர்வதேச சமூகத்தால் உணரப்பட்டுள்ள நிலையிலும், அமெரிக்கா அவர்கள் மீதான தடையை நீக்காதிருப்பது கவலைக்குரியவிடயமே.

நாட்டில் நடைபெற்றுவந்த சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றநிலையில், இராணுவரீதியிலான உதவிகளைச் சர்வதேச சமூகம் வழங்குவது கவலைக்குரியவிடயமாகும்.

இது நிறுத்தப்படல்வேண்டும். மிகமுக்கியமாக இந்தியாவும், அமெரிக்காவும் இத்தகைய உதவிகளை வழங்கி, தமிழரின் அழிவுக்குச் சிங்கள அரசாங்கத்தின் ஊக்கிகளாகச் செயற்படக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபானது - மேலதிகமான பலவேண்டுதல்களை முன்வைப்பதாகக் குற்றம் சாட்டுவது தவறு. பேச்சு மேசைக்கு வந்து, இருதரப்பும் பேசுகையில், அதில் சில திருத்தங்கள் ஏற்படலாம். அதற்குப் புலிகளும் சம்மதிக்கலாம்.

தென்னிலங்கைக் கட்சிகள் சில கூறுவதுபோல் - அமெரிக்காவும் - தமிழீழ விடுதலைப் புலிகள் அதிக கோரிக்கைகளை திட்டவரைபில் முன்வைத்துள்ளார்கள் எனக்கூறுவது, தமிழருக்கு ஆபத்தாக அமைந்துவிடும்.

சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பித்தபோது, நாம் சர்வதேச சமூகத்தையே நம்பியிருந்தோம். ஆனால், இன்று அதன் மீதான நம்பிக்கை - அவநம்பிக்கையாக மாறி வருகின்றது.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயத்தில் சட்டபூர்வமற்றதன்மை வெளிப்பட்டிருக்கின்றபோதிலும்- சர்வதேச சமூகமோ, அரசாங்கமோ மௌனமாகச்செயற்படுவது - ஜனநாயகத்துக்குப் புறம்பானது. யாழில் உள்ள படையினர் சகலருமே - சிங்களவராக உள்ளமையானது, எமக்கு ஆபத்தாகவே அமையும். அவர்கள் இனமுரண்பாட்டில் ஊறியவர்களாக இருக்கின்றனர்.

மீனவர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுதல்வேண்டும். பாஸ் நடைமுறைகள் மற்றும் மீனவர்களிடம் படையினர் மீன் வசூலிப்பது உள்ளிட்ட பலமுறைப்பாடுகள் உள்ளன. அவை நீக்கப்பட சர்வதேச சமூகமே ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் நிக்கலஸ் டீனிடம் யாழ்.மாவட்ட மக்கள் சார்பாக பேசிய பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் - அருட்தந்தை பேணாட் அடிகளார், யாழ். மனித உரிமைகள் அலுவலக இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர, பேராசிரியர் க.சிற்றம்பலம், யு.என்.டி.பி.பிரதிநிதி, யு.என்.எச.சி.ஆர்.பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டதாகத் தெரியவருகிறது. (ப)

# சதுரங்கப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தினால் - மாபெரும் சதுரங்கப் போட்டியொன்று நடாத்தப்படவுள்ளது. இந்தப் போட்டியானது ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளாக நடாத்தப்படும். இந்தப் போட்டியில் எந்த வயதினரும் பங்குபற்றலாம்.

கூடியதொகையினர் விண்ணப்பிக்குமிடத்து, முதற்கட்டப் போட்டிகள் வலிகாமம், வடமராட்சி, யாழ்ப்பாணம், தென்மராட்சி எனும் இடங்களில் நடைபெறும். இறுதிக்கட்டப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிக்கான விண்ணப்பமுடிவுத்திகதி - எதிர்வரும் 28 ஆம் திகதி ஆகும். இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் - 70, வைமன் வீதி, நல்லூர் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு சம்மேளத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (44)

# அழிந்துபோன மரவளத்தை மீளவும் உருவாக்கவேண்டும்

## மட்டுவில் சனசமூக நிலையத் தலைவர்

கடந்தகால அநர்த்தங்களினால் அழிந்துபோன எமது மரவளத்தை, மீள உருவாக்கம் செய்யும் நோக்கோடு, இன்று இந்த மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. மண்வளத்தைப் பேணிப் பாதுகாக்கவும், மழைவீழ்ச்சியை அதிகப்படுத்தவும், மனிதனுடைய அன்றாட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தவதற்கும் உதவும் மரங்களை - ஒவ்வொருவரும் பேணி வளர்க்கவேண்டும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் - மட்டுவில் வடக்குப் பகுதி மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட நிலையத்தலைவர் க.பேரின்பநாதன் தெரிவித்தார்.

மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்குத் தேக்கு, சமண்டலை, கமுகு, மலை வேம்பு போன்ற மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மரக்கன்றுகளை யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை வழங்கினார். மரக்கன்றுகள் நடுகை முறை, பாதுகாப்பு முறை பற்றியும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து ஏனைய பகுதி மக்களுக்கும் மரக்கன்றுகள் விநியோகிக கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (24)

### விவசாய உள்ளீடுகள் விநியோகம்

வடமராட்சி கிழக்கிலுள்ள விவசாயிகளுக்கு - பலவிதமான உதவிகளை மூவிங் மொண்டோ நிறுவனம் செய்துவருகிறது.

விவசாயிகளுக்கான நெல் மற்றும் உள்ளீடுகளை - முதல் கட்டமாக வழங்கியுள்ளது.

இரண்டாம் கட்டமாக அரிவாள் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

### யங் கென்றீஸ் அணி வெற்றிபெற்றது

(யாழ்ப்பாணம்)

எல்லைப்படை மாவீரரின் நினைவு வெற்றி கேடயத்தை - இளவாலை யங் கென்றீஸ் அணி தனதாக்கிக் கொண்டது. தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவினால் நடத்தப்பட்ட எல்லைப்படை மாவீரர் நினைவான உதைப்பந்தாட்ட போட்டியில், யங் கென்றீஸ் அணி - அதனை எதிர்த்தாடிய நாவாநதுறை சென்.மேரிஸ் அணியை வெற்றிபெற்று, சம்பியனாகியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப்போட்டி - ஆட்ட தொடக்கத்தில் இருந்து முடிவுவரை ஆடி, ஒன்றுக்கு ஒன்று என்ற சமநிலையில் இருந்தது. பின்னர் நேரடி உதை மூலம் யங கென்றஸ் வெற்றி பெற்றது. (71)

### கடற்தொழிலாளர் தேவைகள் மதிப்பீடு

வடமராட்சி கிழக்கிலுள்ள கடற்தொழிலாளர் சங்கங்களை ஒன்று கூட்டி, கடந்த புதன்கிழமை மூவிங் மொண்டோ நிறுவனம் - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில், 2004 ஆண்டிற்கான கடற் தொழிலாளர்களுக்கான தேவைகள் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது.

இது சம்மந்தமாக மூவிங் மொண்டோ நிறுவனம் மேல் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக கப்பட்டது. (17)

### சிறு குழுக்கள் தெரிவு

மகளிர் குழுக்களிடையே பொருளாதார மேம்பாட்டை மேம்படுத்தும் நோக்கில், உதவித்திட்டங்களை வழங்கி வருகின்றனர். இந்தக் குழுக்கள் - கைதடி, நாவற்குழி தெற்கு, குட்டிப்புலம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இடங்களிலும் இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிராமிய பெண்களிடம் பொருளாதாரரீதியான சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கிலேயே, கியூடெக் நிறுவன உயிர்ப்பூட்டல் குழுவினர் செயற்பட்டு வருவதாகக் கியூடெக் நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார். (91)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

1

முதலாவது அகவையில்



பெயர் : அ.சாரங்கன்
முகவரி : சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

இரண்டாவது அகவையில்



பெயர் : கே.புருசோத்மன்
முகவரி : கே.கே.எஸ். றோட், மதவடி.

ஏழாவது அகவையில்



பெயர் : கு.பூர்வஜா
முகவரி : வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

# தமிழ் புலமையாளர் அமையம் யாழ்ப்பாணத்தில் அமைப்பு

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் புலமையாளர் அமையம் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு - நேற்று முன் தினம் இணைப்பாளர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் யாழ். இளங் கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக விவசாயபீட பீடாதிபதி கலாநிதி எஸ்.இராஜதுரையும், கியூடெக் பணிப்பாளர் ஜெயக்குமார் அடிகளாரும், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க. பரமநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த அமைப்பினர் தமது செயறபாடுகள் பற்றிக் குறிப்பிடுகையில் - தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் உண்மையான தகவலை, தேசிய மட்டத்திலே அன்றி, உலகமட்டத்திலே அனைவருக்கும் வழங்கவேண்டும்.

புனரமைக்கப்பட்ட யாழ். நூலகத்தினைச் சம்பிரதாயபூர்வச் செயற்பாடுகளைத் தவிர்த்து, வாசகர் நன்மை கருதி உடனடியாகத் திறந்து வைக்குமாறு - யாழ். மாநகர சபையைக் கேட்டுக்கொள்ளுதல், போராட்ட காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யவேண்டும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டு நடவடிக்கையில் இந்தியா தலையிடாதிருக்கக் கோரிக்கை விடுத்தல். இலங்கை அரசாங்கத்துக்கு நீதியான இடைக்கால நிர்வாக அதிகாரத்தினை, விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கவேண்டுமென அழுத்தம் கொடுக்கவேண்டும். மீனவர்கள், விவசாயிகள் தமது தொழிலைச் செய்வதற்கு அனைத்துச் சுதந்திரமும் வழங்கப்படவேண்டும்.

தமிழ்மக்களுடைய குடியிருப்புகளுக்கு அண்மையாகவுள்ள இராணுவப் பாதுகாப்பு வலயங்களை உடன அகற்றி, மக்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதித்தல்.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைந்து, இரு தரப்பினருக்கும் உணமையினை அறியக் கொடுக்கவேண்டும். இலங்கைத்தீவுக்குச் சொந்தமான கச்சதீவுப் பகுதியை இந்தியா தமக்குச் சொந்தமெனக் கூறும கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வது பற்றியதான கோரிக்கைகளை விடுவதாகவும், தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### நடுவப்பணியகம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப்பேரவை நடுவப்பணியகத்தின் திறப்புவிழா - எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கோப்பாய் வீதி கோண்டாவிலில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (44)

# உணவு பதனிடல் பயிற்சி வகுப்பு

மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூகநிலையத்தில் - உணவு பதனிடல் தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று - கடந்த 9 ஆம் திகதிமுதல் 13 ஆம் திகதி வரை பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் நடாத்தப்பட்டது.

இந்த சனசமூகநிலைய ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பயிற்சி வகுப்பில், இந்தப் பகுதியைச் சேர்ந்த 22 யுவதிகள் கலந்துகொண்டு, பயிற்சி பெற்றனர். நிகழ்வின் இறுதி நாளன்று கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்த் நிறுவன திட்டமுகாமையாளர் மரியா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

பயிற்சி வகுப்புச் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியை திருமதி ஜெ.பத்மநாதன் - படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் யுவதிகளுக்குச் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடனும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்களைக் கெடாமல் பதனிட்டு வைத்து, அதிக இலாபத்தை ஈட்ட ஊக்குவிப்பதன் பொருட்டும், இழந்துபோன பொருளாதார வளத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடன், இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

தென்மராட்சிப் பகுதியில் முதன் முறையாக இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டதாகவும், தொடர்ந்து இநதத் திட்டம் தென்மராட்சியின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார் (24)

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------

முகவரி :--------------------------------

பிறந்த ஆண்டு:--------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றோர் ஒப்பம்

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.




# டைனோசர்



65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் எரிகற்கள் (ASTROIDS) பூமியில் விழுந்தபோது ஏற்பட்ட வெப்ப அனல் காற்றால் (Fire Storms) - டைனோசர்கள் இந்த உலகில் இருந்து முற்றாக நீங்கியதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த எரிகற்களின் தாக்கம் மெக்சிக்கோவின் நடுப்பகுதியில் ஏற்பட்டதாகவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், அண்மையில் அப்பிரதேசங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளில், அந்த இடத்தில் காணப்பட்ட பாறைகளில் எரிந்த மரத்தின் கரித் துண்டுகள் (Charcoal) படிமங்கள் எவையும் காணப்படவில்லை. இதனால், காடுகள் எரிந்ததற்கான அடையாளங்கள் எவையும் காணப்படவில்லை.

மேலும் முற்றாக எரியாத கரித் துகள்களை (Soots) கற்பாறைகளில் விஞ்ஞானிகளால் காணநேர்ந்தது. இதன்மூலம் வெப்பநிலை அதிகரிப்பினால் காடுகள் எரிந்தபோது ஏற்பட்ட கரித்து கள்கள் (Soots), வானத்தில் எழுந்து வளிமண்டலத்தை மறைத்ததனால், சூரியஒளி - பூமியை அடையமுடியாத நிலை ஏற்பட்டு, தாவரங்களால் ஒளிச்சேர்க்கை (Photosynthesis) நடத்த முடியாததால், தாவரங்களின் அழிவுடன் டைனோசரும் அழிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அண்மையில் கிளாரி பெல்சர் என்ற பெயருடைய லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி ஒருவர்- எரிகற்கள் விழுந்ததற்கான வேறு ஒரு ஆதாரத்தை (Evidence) முன்வைத்திருந்தார்.

அவர் ஆராய்ந்த கற்களில் இரிடியம் (Iridium), உலோகப் படிவுகளையும் (Sediments) பரந்த அளவில் கண்டுபிடித்துள்ளார்.

இதே மூலகம் எரிகற்களிலும் பரந்த அளவில் காணப்படுகின்றன. இதனால், எரிகற்களினால் ஏற்பட்ட அதிகூடிய வெப்பமே, டைனோசரின் அழிவிற்குக் காரணமென இவர் தெரிவித்துள்ளார்.

# ஒளியின் ஊடுருவும் இயல்பு



ஒளிக்கதிர் - செக்கனுக்கு 186,000 வேகத்தில் பிரயாணம் செய்யும் வல்லமை கொண்டுள்ளது. இவை கண்ணாடி போன்ற ஊடகங்களுக்கூடாகச் செல்லும்போது, தமது வேகத்தை குறைத்துக்கொள்கின்றன. தற்போது ஒளிக்கற்றையை (BEAM OF LIGHT) ஒரு கணத்துக்கு (MOMENT) நிறுத்தி, பின் அதன் பாதையில் செல்ல அனுமதித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். போரோன்ஸ் (PHOTONS) எனப்படும் துகள்களே (PARTICLES) - ஒளிக்கற்றை ஒரு பாதையில் செல்வதற்கு உதவிபுரிகின்றன. ஒளிக்கற்றையில் காணப்படும் போட்ரோன்களைக் (PHOTONS) கட்டுப்படுத்துவது - புதிதாக அறிமுகப்படத்தப்படவுள்ள குவான்டம் (QUANTAM) கணினிகளுக்கு மிகவும் அவசியமாகும். ஒளிக்கற்றையில் காணப்படும் துகள்களான போட்ரோன்களைச் (PHOTONS) சேகரித்துத் தகவல்களைப் பகுத்தாய்வதன்மூலம் குவான்டம் கணினிகளை இயக்கமுடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கணினிக் கழிவுகள்

விஞ்ஞான முன்னேற்றத்தில் செயற்கையான பாவனைப்பொருட்கள் அதிக அளவில் மக்களால் பாவிக்கப்படுகின்றன. குறிப்பாக, பிளாஸ்ரிக்கினால் ஆன பல பொருட்கள் இலகுவில் அழித்துவிட முடியாதவையாக (BIO DEGRADABCE) உள்ளன.



இதனால், இவை சூழல் மாசடைவதற்கு (ENVIROMENTAL POLLUTION) உறுதுணை புரிகின்றன. அண்மையில் இந்தப் பட்டியலில் இலத்திரனியல் பொருட்களும் இணைந்துள்ளன. வளர்ந்த நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் 30 மில்லியன் கணினிகள் பாவனைக்குதவாது வீசப்படுகின்றன. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் தாழ்ந்த பிரதேசங்கள் இந்தவகையான இலத்திரனியல் பொருட்கள்மூலமே நிரப்பப்படுகின்றன. இந்தக் கணினி போன்றவற்றின் எஞ்சிய பாகங்கள் நச்சுத்தன்மை கொண்ட பல உலோகப் பாகங்களைக் கொண்டிருக்கின்றன. இரசம் (MERCURY), ஈயம், போன்றன இலகுவில் எரித்துவிட முடியாத பொருட்களாகும் (FLAME RETANDANTS). மீண்டும் இவற்றை உள்ளடக்கிய பொருட்களை திருத்த முற்படும்போதும், பல உபயோகிக்கமுடியாத மேற்கூறப்பட்ட பாகங்கள் வீசப்படுகின்றன. திரும்பவும் பாவனைக்குட்படுத்தல் செயற்படுத்தும் போதும், தேவை இல்லாதவற்றை எரித்துவிடல்வேண்டும். இவை வளிமண்டலத்தில் நச்சு வாயுக்களின் (NOXIOUS GASES) செறிவை அதிகரிக்கச் செய்கின்றன. இந்தியா போன்ற நாடுகளில் கணினிப்பொருட்களில் தேவையில்லாதவற்றை அகற்றுதல் தொடர்பான வேலைகளை வறிய மக்கள் செய்வதால், சுவாசம் தொடர்பான நோய்களால் தாக்கப்படுவதாக அறியப்படுகிறது.

# புதிய சக்தி



அணு உலைகளின் பாவனைக்குப்பின், எஞ்சியுள்ள கதிர்வீச்சுள்ள கழிவுப்பொருட்களை (RADIO ACTIVE WASTE), மீண்டும் யுரேனியமாக மாற்றும் வல்லமை கொண்டுள்ள ஜியோபக்ரர் (GEOBACTER) எனப்படும் பக்ரீரியாக்களையும், அதன் மரபணுத்தொகுதியையும் (GENOME) அமெரிக்க விஞ்ஞானிகள் வரைந்துள்ளனர்.

இந்த வகையான பக்ரீரியாக்கள் நீரில் கரைந்துள்ள யூரேனியம், ரேடியோ நியூக்லைட் (RADIO NUCLIDES) ஆகிய கழிவுகள் மீண்டும் யுரேனியமாக மாறுவதை அவதானித்துள்ளார்கள். கழிவுகளில் காணப்பட்ட பொருட்களிலிருந்து யுரேனியத்துக்கான இலத்திரன் அமைப்பை இந்த பக்ரீரியாக்கள் உருவாக்கும் வல்லமை கொண்டுள்ளதால், மீண்டும் உயிரியல் கலங்களை (BIO BATTENES) உருவாக்க முடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# செவ்வாய்க் கிரகம்



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட கலத்திலிருந்து கிடைத்த தகவல்கள்மூலம் - செவ்வாயில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிரகத்தில் கதிர்வீச்சு, பூமியைவிட அதிகமாக தென்படுவதால், மனித உடலுக்கு ஆபத்து நேரிடலாம் எனவும், அவை பாரதூரமான (Fatal) விளைவுகளை தராது எனவும், அந்தக்கோள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமியிலும் கதிர் வீச்சின் (Cosmic Rays) பாதிப்பு இருந்தபோதும், பூமியின் காந்தப்புலம் (Magnetie fieli) அவற்றைத் தணித்து விடுகின்றது.

மேலும் பூமியைச் சுற்றிவரும்போது, விண்வெளி வீரர்களுக்கு ஏற்படும் பாதிப்பைவிட, செவ்வாய்க்கிரகத்தைச் சுற்றிவரும்போது அதிகளவில் கதிர்வீச்சுத் தாக்குதலுக்குள்ளாவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பூமியைச் சுற்றிவரும்போது சிறிது காலமே விண்வெளியில் இருக்க நேரிடுகின்றது. ஆனால், செவ்வாய்க்கிரகத்தில் மூன்று ஆண்டுகள்வரை சுற்றவேண்டியுள்ளது. இதனால், செவ்வாயைச் சுற்றிவரும் விண்வெளி வீரர்கள், அதிகளவில் கதிர்வீச்சுக்குள்ளாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது அதிகளவில் புற்றுநோய், கண்ணில் சவ்வு படருதல் (Cataracts), நரம்பு தொடர்பான பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது.

# எபோலா தடுப்பு மருந்து



**ஆ**பிரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் "எபோலா" எனப்படும் கொடிய நோயினால் மரணமடைந்து வருகின்றனர். இந்த நோய் எபோலா (EBOLA) எனப்படும் வைரஸினால் பரவி வருகின்றது. வைரஸ்கள் நுண் உயிரல்ல. இவை ஒருவித இரசாயன அமைப்பு ஆகும். இதனால், இந்த வைரஸ் கிருமியைக் கட்டுப்படுத்துவதற்கு, வைரஸைப் போன்ற கட்டமைப்பைக்கொண்ட இரசாயனப் பொருளைக் கண்டுபிடித்துள்ளனர். இவற்றை எலிகளுககு ஏற்றுவதன்மூலம், அதன் உடலில் இந்த நோய்க்கெதிரான நோய் எதிர்ப்புச் சக்தியை (ANTI TOXIN) அதன் உடலில் ஏற்ப டுத்துகிறார்கள். பின் இந்த எலிகளுக்கு எபோலா நோய்க்கிருமிகளை (LETHAL DOSE OF EBOLA VIRUS) அதன் உடலில் செலுத்தியிருந்தனர். ஆனால், அந்த எலிகளில் நோய்க்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இந்த நோயின் முக்கிய அறிகுறியான - இரத்தக்குழாயில் இருந்து இரத்தம் வெளியேறுவது (HAEMORRHAGIE) தவிர்க்கப்பட்டிருந் ததை அவதானித்தார்கள். 'எபோலா' வைரஸின் புரதத்திலிருந்தே புதிய நோய்த்தடுப்பு வைரஸை விஞ்ஞானிகள் உருவாக்கியிருந்தனர். ஆனால், வழக்கமாக வைரஸ்களைப் போன்று பெருக்கமடையவில்லை. ஏனெனில், மரபணுக்கள் (GENETIC MATERIAL) அங்கு காணப்படவில்லை.

# குட்டிகளைக் காவும் மிருகம்



கங்காரு (KANKAROOS), கோலாஸ் (KOALAS) ஆகிய மிருகங்கள் - கருப்பைக்கு பதிலாக, உடலில் வெளிப்புறத்திலுள்ள பைகளில் (Pouch) தமது குட்டிகளைப் பராமரிக்கின்றன. இந்த வகையான விலங்கினங்கள் MAR SUPIAL என அழைக்கப்படுகின்றன.

சீனாவில், அண்மையில் கண்டெடுக்கப்பட்ட படிமங்கள் (Fossiles) - எலியின் உருவத்தைக்கொண்ட இவ்வகையான விலங்குகள் வாழ்ந்ததற்கான ஆதாரத்தை அறிந்துகொண்டனர்.

இது 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதென அறியப்பட்டது. லியோனிங் எனப்படும் சீனாவின் மாகாணத்தில் நன்கு பாதுகாக்கப்பட்டநிலையில் காணப்பட்டிருந்து. அங்கு காணப்பட்ட மயிர்கள், கால்ப்பாதங்களின் பகுதிகளை ஆராய்ந்தபோது, அவை மரங்களில் ஏற்கக்கூடிய இயல்புகளைக் கொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது. தீவிரமாக இவற்றினை ஆராய்ந்தபோது, 125 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த பாலூட்டி (MAMMALS), ஆரம்பகாலத்து பாலூட்டிகளின் பரிணாமவளர்ச்சியை (EVOLATUION) அறிந்துகொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஆரம்பத்தில் கண்டெடுக்கப்பட்ட படிமங்களில் (Fossiles) - மாமிச பட்சினிகளின் (Cannivorous) முகவாயில் காணப்பட்ட பற்களை ஆராய்ந்திருந்தார்கள்.

இந்த ஆய்வுகள்மூலம், இவை நிலத்தில் எதிரியிடம் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு மரத்தில் வாழ முற்பட்டதாகவும் அறியப்பட்டுள்ளது.

# மலேரியாவைத் தடுக்கும் மீன்கள்

**தா**வரங்கள், விலங்குகள் ஆகியனவற்றிற்குத் தாக்கங்களை உண்டாக்கும் கிருமிகளை அழிப்பதற்கு, கிருமிநாசினிகள் (Pesticides) பாவிக்கப்படுகின்றன. பலவேளைகளில், கிருமிநாசினிகள் சில பக்க விளைவுகளை (Side Effects) உருவாக்க முயல்கின்றன.



இந்த நிலையில், உயிரினங்களைக் கொண்டு, உயிரினங்களை அழிக்கும் (Biological Control Method) பாவிக்கப்படுகின்றது.

தென்கொரியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் - மலேரியா நோயினைப் பரப்பும் நுளம்புகளைக் கொல்வதற்கு, அதன் குடம்பிகளை (Larvaes) உணவாகக் கொள்ளும் மீன்களை, நெல்வயல்களில் தேங்கிநிற்கும் நீரில் வளர்க்கும் புதியமுறையினை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த மீன்கள் நீர்த்தேக்கங்களில் அறிமுகப்படுத்திய சில நாட்களில், குடம்பிகள் எல்லாவற்றையும் தின்று அழித்துவிட்டன.

மடிலோச்செஷ் (Muddy Loaches) எனப்படும் ஈரூடக வாழ் (Omnivirous) மீன்கள் - சேற்று மண்மிக்க நீர்த்தேக்கங்களுக்கு மிகவும் சிறந்தனவென தெரிவு செய்யப்பட்டுள்ளது.

10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் காடுகளை அழித்து, எரித்து பயிர்செய்யும்முறை அறிமுகப்படுத்தப்பட்டபொழுது ஏற்பட்ட நீர்த்தேக்கங்களே, மலேரியாவின் ஆரம்பம் என விஞ்ஞானிகள் அறிந்துகொண்டனர்.

# திரை விமர்சனம்

## ஏக் தின் அச்சனக்

## (Suddenly one day)



இது ஒரு வங்காள மொழிப் படம். புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் மிருணாள் சென்னினால் இயக்கப்பட்ட இந்தப் படம் - 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற 12 ஆவது திரைப் படவிழாவில் பரிசுபெற்றது. இது ஒரு கொடூரமான மனிதனைப் பற்றிய கதை. ஒரு பேராசிரியர் ஒரு மழைநாளில் வீட்டைவிட்டு வெளியே போகிறார். ஆனால், இரவு அவர் வீடு திரும்பவில்லை. அவருடைய மனைவி, இரண்டு பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் தேடப்படுகிறார். ஏன் அவர் இப்படிச் செய்தார்? அவருக்கும், குடும்பத்துக்கும் இடையிலான உறவு எந்தளவுக்கு ஆரோக்கியமாக இருந்தது. இதுதான் படத்தின் கருப்பொருள். பிரபல நட்சத்திரங்களாகிய சப்னா ஆஸ்மி, சேரம் லாக, அபர்ணா சென் ஆகியோர் நடிப்பில் வெளிவந்த இந்தப் படம், 1988 - 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சக்கைபோடுபோட்ட படம். இந்தப் படம் மனிதர்களின் பலவகையான குணங்களையுப் படம்போட்டுக் காட்டுகின்றது. தந்தை - மகன், கணவன் - மனைவி, தந்தை - மகள் உறவுகள் எல்லாம் எப்படி யதார்த்தத்துக்கு ஏற்ப காணப்படுகின்றன என்றெல்லாம் இந்தப் படம்மூலம் அறியக்கூடியதாக உள்ளது. பாடல்கள் எல்லாம் ஓரளவுக்குச் சுமாரானதாக இருந்தாலும், சில பாடல்கள் காதில் ஒலித்தவண்ணம் உள்ளன. சப்னா ஆஸ்மியின் நடிப்பு பிரமாதம். கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலை அலகுகள் பிரிவினரால் இந்தப் படம் திரையிடப்பட்டது. இதனைப் பார்க்கவந்த திரைப்பட ரசிகர்கள்- வேற்றுமொழிப் படமென்றாலும்கூட, இந்தப் படத்தைப்பற்றி நல்ல விமர்சனத்துடன்கூடிய கருத்துக்களைத் தெரிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

- PNS -

# சிபிலிஸ்நோய்

பாலியல் தொடர்புகளால் வருவது சிபிலிஸ் என்ற நோய். இந்த நோயினை ஆரம்பத்தில் கண்டறியாதுவிடும்போது, இதனுடைய தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இது காலம் செல்லச்செல்ல பக்றீரியாக்களின் தாக்கம் கடுமையாகி மனிதர்களின் முகம் வரை பரவுகின்றது. இது ஒருவகையான துர்மணத்தினையும் தரக்கூடியது. ஆதலால், இந்த நோய்வாய்ப்பட்டவரின் அருகில் இருப்பதனை மற்றவர்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. மனிதர்கள் பாலியல் ரீதியான தொடர்புகளை விஸ்தரிக்கும் பொழுது - மற்றவர்களுக்கும் இது பரவக்கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. HIV நோயின் ஆரம்பகட்டமே இந்த சிபிலிஸ் நோயாக இருந்தாலும்கூட, இதனுடைய கடுமையான விளைவுகளைக் குணப்படுத்தக்கூடியதாக மருந்துகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. இந்த நோயானது முதன்முதலில் 1496 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் கண்டறியப்பட்டது. இதற்கு ஆரம்பத்தில் வைக்கப்பட்ட பெயர் - கிரேற்பொக்ஸ் அல்லது பிரெஞ்ச் நோய். அந்தக் காலங்களில் பெரிதாக எந்தப் பாதிப்பும் இந்த நோயினால் ஏற்படவில்லை. ஆனால், தற்போது இது ஒரு கொடிய நோயாகக் காணப்படுகின்றது.



# வாரம் ஒரு யோகாசனம்

## அஸ்வினி முத்ரா

சிரசாசனத்தில் நின்று, கால்களை மடக்கி, இரண்டு உள்ளங் கால்களையும் ஒன்றாக இணைத்து, கும்பிடுவது போல் வளைத்துக்கொண்டு, சுவாசத்தை வெளியே விட்டுக்கொண்டு, சீரான சுவாசத்தை உள்ளிழுத்து, ஆறு எண்ணும்வரை அடக்கி, கும்பகம் செய்து, மூலத்தை உள்ளும், வெளியுமாக அசைக்கவேண்டும். சுவாசத்தை அடக்கும்போது, சக்தி இருக்கும்வரை மூலத்தை அசைக்க வேண்டும். பின்பு ஓய்வெடுக்கவும். முதல் ஆரம்பத்தில் 2 தடவைகளும், பழகப்பழக 6 தடவைகளும் செய்தால் போதுமானது.



### நன்மைகள்

அஸ்வினி முத்ராவில் மூலம், அசையும்போது, மலக்குடல், பெருங்குடல் அசைக்கப்படுகின்றது. மலக்சிக்கல் நீங்கி, மூலவியாதியை இல்லாமல் ஒழிக்கின்றது. மூலத்தில் உண்டாகும் நோய்களான சவ்வு வளருதல், முளை உண்டாதல் போன்றவை நீக்கப்படுகின்றது. மூலவியாதியே வராது. மூலத்தால் இரத்தம் போதல் உடனடியாக நீங்கும். மலச்சிக்கலுக்கு இது அருமருந்தாகும். இரத்தமூலம், உள்மூலம், வெளிமூலம் வராமல் தடுக்கும். கண் பிரகாசம் பெறும். இருதயம் பலம் பெறும். ஞாபகசக்தி உண்டாகும். இந்த ஆசனம் இது போன்ற நோய்களுக்குச் சிறந்த அருமருந்தாகும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# தமிழ் கல்விச்சமூகத்தின் சிந்தனைக்கு...!

கல்வி உலகின் பெரும் சொத்து

கல்வி கற்பது ஒவ்வொரு பிள்ளையின் உரிமை.

கல்வியைத் தமது பிள்ளைகளுக்குப் போதிப்பதென்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமை.

இப்படிப் பல்வேறுபட்ட கல்வியை வலியுறுத்தும் வாசகங்களுடன் கூடிய விளம்பரப் பலகைகளும், சுவரொட்டிகளும் நாடெங்கும் முக்கிய இடங்களில் காணப்படுகின்றன.

ஐ.நா.வின் கல்விக்கான அமைப்பும், வேறு கல்விசார் நிறுவனங்களும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் எல்லாப்பிள்ளைகளும் கல்வியறிவைப் பெறவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறைகொண்டு, பலகோடி டொலர் செலவில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் உலகெங்கும் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் கல்விசார் சமூகத்தவர்கள் அந்தந்த நாட்டின் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஆய்வுகள், மதிப்பீடுகள், கருத்தரங்கள் செயலமர்வுகள் எனப்பலவற்றை பல கோடி ரூபா செலவில் மேற்கொண்டு அறிக்கைகளைத்தயாரித்து, அவற்றை பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துவதற்குரிய நிர்வாகக் கட்டமைப்புகளிடம் கையளித்தும் வருகிறார்கள்.

கல்வி ஒரு நாட்டின் அடுத்த தலைமுறையை மட்டுமல்ல அடுத்த கட்டத்திற்கான தலைவர்களையும் துறைசார் நிபுணர்களையும் உருவாக்க அவசியமான ஒன்றாகும்.

உலகில் முன்னேறிய நாடுகளில் எல்லாம், அடுத்துவரும் இரண்டு மூன்று தசாப்தங்களில் சமூக அரசியல் அறிவியல் வளர்ச்சியானது எத்தகைய சிகரங்களைத் தொடப் போகின்றது என்பதை மிகநுணுக்கமாகத் தொலைநோக்கு சிந்தனையுடன் ஆராய்ந்து, அந்தந்தக் காலகட்டங்களில் அந்தநாடு எத்தகைய முறையிலான வளர்ச்சியை எட்டினால் எதிர்கால உலக சமூகத்தில் உயர்ந்து நிலைநிற்கமுடியும் என்பதைக் கணிப்பிட்டு, அதற்கேற்ப இளைய சமூகத்தவரின் கல்வியில் உயர்ச்சிக்கான திட்டங்களைத் தீர்க்கதரிசனப் பார்வையுடன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் போரில் ஏற்பட்ட யுத்தப்பேரழிவுகளுக்குப் பின்னர் மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் ஆசியாவின் சில நாடுகளும் தமது நாடுகளின் எதிர்கால வளர்ச்சிக்கு, கல்வியின் அத்தியாவசியம் குறித்து மிகத் துல்லியமாகச் சிந்தித்ததன் விளைவே இன்று அந்தந்த நாடுகளின் பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாகும்.

போர்க்காலத்து இழப்புகளிலிருந்து - சாம்பலில் இருந்து மீளுயிர்ப்படைந்து வெளிவரும் 'பீனிக்ஸ்' பறவைபோல், மீண்டெழுந்து அரைநூற்றாண்டு காலப்பகுதிக்குள் சகல துறைகளிலும் மகத்தான சாதனைகளைப் படைத்து கம்பீரம்காட்டி நிற்பதற்கு மூலாதாரமாக கல்விக்கு அந்த நாடுகள் கொடுத்த முக்கியத்துவமே காரணமாகும்.

இந்தநிலையில் ஆசியாவில் அதிகம் படித்த மக்கள் நிறைந்த நாடு என்ற பெயரை ஒரு காலத்தில் பெற்றிருந்த இலங்கையின் இன்றைய கல்வித்தரத்தை - வளர்ச்சியை உற்று நோக்கினால் அதன் இன்றைய நிலை கவலைக்குரியதாகியுள்ளமையைப் புரிந்துகொள்ளமுடியும்.

இதற்கு தொலைநோக்கு சிந்தனையுடன் கூடிய கல்வி வளர்ச்சி குறித்த திட்டங்கள் இன்மை மட்டும் காரணமல்ல, கல்வியும் அரசியல்மயமாகி விட்டுள்ளமையே காரணமாகும்.

இன - மத - மற்றும் மொழி அடிப்படையில் கல்வியின் சகல கூறுகளையும் அரசியல் தன்மையுடன் அணுகமுயன்ற சிறிலங்காவின் அறிவுஜீவிகளின் அறியாமையின் வெளிப்பாடே, இன்றைய இந்த நாட்டின் கல்வித்துறையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றால் அது மிகையில்லை.

பல்வேறு காரணங்களால் இலங்கையின் கல்வித்தரம் கடுமையாக வீழ்ச்சிகண்டு வருவதுடன், இங்கு தற்போது சுமார் 57,000 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைக்கே செல்வதில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இந்தப் பல்வேறு காரணிகளில் வறுமை, போர், பிள்ளைகள் மீதான அக்கறையின்மை, கல்வித்துறையில் காணும் திட்டமிடல் கோளாறு, பாதுகாப்பின்மை உட்பட வேறுபல உளவியல் சிக்கல்களும் அடங்கும். இவர்களில் பெரும்பாலும் 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களேயாகும். இவர்களில் சுமார் 15 ஆயிரம் பேர்வரை பாடசாலையில் கல்வியை ஏதேதோ காரணங்களுக்காகத் தொடரமுடியாது இடைவிலகியவர்கள் என்றும் தெரிகிறது.

இந்தக் கல்விச் சீரழிவானது சிறுவர்தொழிலாளர்கள், பிச்சைக்காரர்கள், பால்யகுற்றவாளிகள் போன்றோரை அதிகளவில் உருவாக்கிவருவதுடன், இளைய சமூகத்தவரிடையே இனங்காணமுடியாத மனோவியல் நோய்கள் வரவும் காரணமாகியுள்ளது.

தமிழ்மக்கள் வாழும் வடக்கு - கிழக்கு, கடந்த சில தசாப்தங்களாகவே போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். மக்களின் இயல்பு வாழ்க்கை, இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறைகளாலும் அழிக்கப்பட்ட அதேவேளை - இளைய தலைமுறையினரின் கல்வியும் சீரழிக்கப்பட்டமை குறித்து விபரிக்கவேண்டியதில்லை. இங்கு 35 ஆயிரம் மாணவர்கள் வரை பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதாகவும், சுமார் 12,500 பேர் கல்வியைத் தொடராது இடைவிலகியிருப்பதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

உண்மையான தொகை இதைவிட அதிகமாவே இருக்கும். இராணுவத்தால் சிதைக்கப்பட்ட, ஆக்கிரமிக்கப்பட்ட, முற்றாகவே அழிக்கப்பட்ட பாடசாலைகளின் தொகையை மதிப்பீடு செய்தால் உண்மையான தொகையைப் புரிந்துகொள்ள முடியும்.

இது கல்வியையே வாழ்வின் மூலாதாரமாகவும், பலமாகவும் கருதும் இனத்திற்கு எச்சரிக்கையூட்டும் செய்தியாகும்.

கல்வியில் வீழ்ச்சி - கலாசாரத்தை சிதைக்கும், கலாசார அழிவு இனத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும்.

தமிழினம் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## நாடும் நடப்பும்




# தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க கல்வி மேம்பாட்டுப் பேரவை நடவடிக்கை!

தொல்பொருள் சின்னங்களையும், புராதன ஆவணங்களையும், சேகரிக்கும் முயற்சியில் - தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலைஞானி இராசையாவினது பாதுகாப்பில் இதுவரை காலமும் வைக்கப்பட்டிருந்த புராதன சின்னங்கள் பல, அவரது மறைவுக்கு பின்னர் பழுதடைந்தும், உரியபாதுகாப்பின்றியும் இருந்து வந்தன. இந்தப் புராதன பொருட்கள்யாவும், தற்போது தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினரால் பொறுப்பேற்கப்பட்டு, உரியமுறையில் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் தமது வீடுகளில் உரியமுறையில் பேணப்பட்டாதுள்ள புராதன சின்னங்களை, தமிழீழ கல்வி மேம்பாட்டுத்துறை யாழ் அலுவலகத்தில் கையளிப்பதன்மூலம், எமது இனத்தின் தொன்மையையும், வரலாற்று ஆதாரத்தையும் பேண, உதவமுடியுமென கல்வி மேம்பாட்டு பேரவையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கிளிநொச்சியில அருங்காட்சியகம் (மியூசியம்) ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அருங்காட்சியகம் அமைக்கப்பட்ட பின்னர், புராதன சின்னங்கள், வரலாற்று ஆதாரங்கள் அனைத்தும் அங்கு பாதுகாப்பாக வைத்துப் பேணப்படுமெனத் தெரியவருகிறது.

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர் ஆலய விக்கிரகங்கள் தொடக்கம் பல புராதன பொருட்கள் திருட்டுப் போவதும், தென்னிலங்கை வியாபாரிகளுக்கு விற்கப்படுவதும், அதிகரித்துவருகிறது. இவற்றை தடுக்கும் நோக்குடன் குழுவொன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

## வீதிக்கு குறுக்கே மண் அணைகள்; போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு

வீதிகளுக்கு குறுக்கே போடப்பட்டுள்ள மண் அணைகளின் காரணமாக, பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிராமப்புறங்களிலுள்ள பிரதான வீதிகள் பலவற்றில் இவ்வாறான மண்அணைகள் பல போடப்பட்டுள்ளன.

வாகனங்களில் வேகங்களைக் குறைப்பதற்கு தடுப்பணைகளாகப் பயன்படும் இந்த மண் அணைகள் - வீதி விபத்துக்கள் ஏற்படுத்துவற்கும் வழிகோலுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இணுவில் பகுதியில் மட்டும் அரை கிலோமீற்றர் தூரத்திற்குள்ளேயே இவ்வாறான எட்டு மண் அணைகள் அமைக்கபட்டுள்ளன.

## மாணவர் பேரவை தாக்குதல்; நாளை விசாரணை நடைபெறும்

தமிழீழ மாணவர் பேரவைமீதான தாக்குதல் குறித்து, நாளை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணை நடத்துபபடவுள்ளதென யாழ்.மாவட்ட மனித உரிமைகள் அமைப்பின மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர தெரிவித்தார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நள்ளிரவில், யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் அமைந்துள்ள, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தைச் சோதனையிட்ட இராணுவ, பொலிஸ் குழுவொன்று, அங்கு மாணவர்களால் அமைக்கப்பட்ட மாவீரர்தின நினைவு வளைவை 'ட்றக்' வண்டி மூலம் இடித்து வீழ்த்தியதுடன், பேரவையின் சொத்துக்களையும் நாசம் செய்திருந்தது.

இது தொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால், யாழ். மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே நாளை இது தொடர்பாக விசாரணையை மனித உரிமை ஆணைக்குழுவினர் மேற்கொள்ளவுள்ளார்கள். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர், யாழ் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருவர் உட்பட ஐவர் இந்த விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். (ப)

### பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளுக்கான

# நிதி ஒதுக்கீடு விவாதத்தின்போது கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும்!

ஜனாதிபதியின் வசமுள்ள - பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சிற்கான, நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் எதிர்த்து வாக்களிக்கப்போவதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில்,

சமாதான பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பது, யுத்தகாலத்தைக் காட்டிலும் தற்போது பாதுகாப்பிற்கு கூடிய நிதி ஒதுக்கப்பட்டிருப்பதும் ஒரு காரணமாக அமையுமென்றும், ஊடகத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்கு தாம் செயற்படும் விதம் குறித்து, நாளை தமிழ் தேசிய கூட்டமைப்பு முடிவெடுக்குமெனவும் தெரிவித்தார்.

போர்நடக்கும் காலத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 50 பில்லியனுக்கு குறைந்த நிதியே ஒதுக்கப்பட்டது. ஆனால், சமாதான சூழ்நிலையில் வரவு - செலவுத்திட்டத்தில் 66 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது அல்ல எனவும் அவர் தெரிவித்தார். (01)

# சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்காதோர் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்படும் - சாரதி அனுமதிப்பத்திரங்களில் பல, நீண்டநாடகளாகியும் உரியவர்களுக்கு கிடைக்கவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது தொடர்பாக தெரியவருவதாவது.

யாழ். குடாநாட்டிலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு, செயல்முறைப்பரீட்சை, எழுத்துப்பரீட்சை என்பன இங்கேயே நடத்தப்பட்டன. ஒரு வருடத்திற்கு முன்னரேயே இந்தப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. இவை ஒருவருட காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகக்கூடியவை.

இந்த நிலையில் அதிகமானோருக்கு ஒரு வருடகாலப் பகுதிக்குள்ளேயே உரிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் பதிவுத்தபால மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், சிலருக்கு நீண்ட நாட்களாகியும், உரிய சாரதி அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படவில்லை.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் நடத்தபபட்ட நடமாடும் சேவையின்போது, நடைபெற்ற சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான பரீட்சையில் தோற்றிய பலருக்கு, தற்போது சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த நிலையில், ஒரு வருட காலத்திற்கு மேலாகியும் சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்காதவர்களுடைய 236 முறைப்பாடுகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட சேவையின்போது பெறப்பட்டுள்ளன. இவை தொடர்பாக அடுத்த வாரம் கொழும்பு செல்லும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் சி. பத்மநாதன் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சாரதி அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காதவர்கள் தமது முறைப்பாடுகளை அலுவலக நேரங்களில் பதிவு செய்யலாமெனை, யாழ். செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச)

# புனிதநகர் கிராம மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா?

வடமராட்சிப் பிரதேசமான - பருத்தித்துறையிலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் கற்கோவளம் அமைந்துள்ளது. இங்கு புனிதநகர் குடியேற்றத்திட்டம் உள்ளது. இங்கு வெளியிடங்களிலிருந்து தொடர்புகள் நேரடியாகப் பெறமுடியாதநிலையில், சுமார் 25 வருடங்களாகக் குறிப்பிட்டளவு ஒரு தொகை மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில், நகர சுத்திகரிப்பாளர்களாகத் தமது வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறார்கள்.

நகரங்களில் உள்ளவர்கள் - நலமுடன் வாழவேண்டுமென நாளாந்தம் - வீதிகள், அரச பணிமனைகள், பொது இடங்கள் எனப் பல்வேறு இடங்களையும் சுத்தம் செய்து, அங்குள்ளவர்களின் வாழ்வுக்கு வழிசமைப்பவர்களின் வாழ்க்கை...? வாழ்விடங்கள்...?

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/406 கிராம சேவையாளரின் பார்வையிலேயே இந்தப் புனிதநகர் குடியிருப்புக்கள் உள்ளன. இங்கு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை, தாங்களாகவே குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கான பிரச்சினைகள் பல இருந்தபோதிலும், போக்குவரத்துப் பாதையே மிகமிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

இங்கு 30 குடும்பங்களைச் சேர்ந்த 140 இற்கும் மேற்பட்ட மக்கள் உள்ளனர். இவர்களுக்கென ஒரு கிணறு கூட பாதுகாப்பான முறையில் அமைக்கப்படவில்லை. 4 அடி கிடங்கை வெட்டும்போது, நீர் வருகிறது. இதனையே குடிப்பதற்கும், பிறதேவைகளுக்கும் பயன் படுத்துகிறார்கள்.

கடற்பிரதேசத்தை அண்மித்தே இவர்களின் வாழ்விடங்கள் அமைந்துள்ளன. கற்கோவளம் வீதியிலிருந்து குறிப்பிட்டளவு தூரமே ஒழுங்கை அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஒரு கிலோமீற்றர் வரையான கரடு முரடான, வெளியான இடத்தையே பாதையாகப் பயன்படுத்துகிறார்கள். இங்கு செல்வதாயின், குறிப்பிட்ட ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கால் நடையாகச் சென்று, குடிசைகளை அடையமுடியும்.

மணல்கள் நிறைந்த தரையாக இருப்பதினால், துவிச்சக்கரவண்டியைக்கூட உருட்டிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கியநிலையில் இந்த மக்கள் உள்ளனர்.

பாடசாலை மாணவர்கள், அவசர நோயாளிகள், வயது முதிர்ந்தோர் என எந்த நிலையிலுள்ளவர்களாயினும், குறிப்பிட்ட தூரத்திற்கு நடந்து சென்றே, தமது தேவைகளை நிறைவேற்றும் பரிதாபமானநிலையில் உள்ளனர். இவர்கள், மழை காலங்களில் மிகவும் பாரதூரமான அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள், தள்ளப்படுகின்றார்கள்.

இங்குள்ளவர்களுக்கு இதுவரை காலமும் எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை. இவர்களும் இராணுவ நடவடிக்கைகளால் மூன்றுமுறை இடம்பெயர்ந்து, தமது சொத்துக்களை இழந்தவர்கள். இவர்களுக்கு ஏனையவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை வழங்கலாம்தானே.



இந்த மக்களை - உரிய அமைப்புக்கள் ஏன் கண்டுகொள்வதில்லை. நகர சுத்திகரிப்பாளர்களான இவர்களுக்கு, மாத சம்பளம் ரூ.3200 வழங்கப்படுகிறது. இந்தப் பணத்தைக் கொண்டே இவர்கள் தமது அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிறார்கள். அரச ஊழியர்கள் என்ற காரணத்தால்? உலர் உணவு நிவாரணம்கூட வழங்கப்படுவதில்லை.

இவர்களுக்கென மருத்துவ ஆலோசனைகள், உதவிகள் - வருடத்திற்கு இருமுறை என்ற அடிப்படையிலேயே கிடைக்கின்றன. இங்குள்ளவர்களுக்கு எந்தவகையான நோய் ஏற்படினும், மந்திகை வைத்தியசாலைக்கே போகவேண்டும்.

இந்த வைத்தியசாலையும், இவர்களது இடமும் மிகநீண்டதூர இடைவெளியிலேயே உள்ளது. இந்தக் கிராம மக்களின் நோய்த்தாக்கங்களின் பதிவினை - வைத்தியசாலையில் பார்த்துவிட்டே, நோய்த் தடுப்பு நடவடிக்கை இடம்பெறுவதாகவும், தம்க்கு நோய்கள் வருமுன்காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, நோய்கள் வந்தபின்னர் தான் தடுப்பு நடவடிக்கைகள் இடம் பெறுகின்றது எனவும் இங்குள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இது மிகவும் மனவருத்தம் தரக்கூடிய நிகழ்வாகவுள்ளது எனவும் இந்தப் பகுதி மக்கள் - உடல், உளரீதியாகப் பாதிப்படைந்த நிலையில் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர்.

இந்தக் குடிமனைகளுடன், இவர்களது சொத்தாக தென்னைமரங்களே உள்ளன. இந்த மரங்களின் வளர்ச்சியை வைத்தே, இவர்களின் வரலாற்றைக் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

எத்தனையோ அரச நிறுவனங்கள் சார்பாகவும், அரசசார்பற்ற நிறுவனங்கள் சார்பாகவும் பலதடவைகள் இங்குள்ளவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டபோதிலும், இதுவரை (இத்தனை ஆண்டுகளாக) எதுவித உதவிகளோ வழங்கப்படவில்லை என்பது நம்பமுடியாத உண்மையாகவுள்ளது.



தேர்தல் காலங்களில் பரிவாரங்கள்சூழ, கூப்பிய கையுடன் வரும் அரசியல்வாதிகள் - பலவகையான வார்த்தை ஜாலங்களை மக்கள்முன் வாக்குறுதிகளாக வைப்பார்கள். தேர்தல் முடிந்தவுடன் தமது ஆசனங்களைப் பாதுகாப்பவர்கள், தாம்தேடிப் போனவர்கள் - தம்மைத் தேடி வருகிறார்களே என்ற எந்தவித சஞ்சலங்களும் இன்றி, தமக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளில் தமது அலுவல்களுடன், அடுத்ததேர்தலையே நோக்காகக்கொண்டு செயறபடுகிறார்கள். இது இந்தக் குடியிருப்பு மக்கள் அனுபவரீதியாகப் பெற்ற உண்மைகள்.



இங்குள்ள மாணவர்கள் புற்றளை மகா வித்தியாலயத்திலும், கற கோவளம் மெதடிஸ்த பாடசாலையிலும் தமது கல்வியை மேற்கொள்கின்றனர். இந்தக் குடிசைகளுக்கு நடுவே பரந்து வளர்ந்த மரத்தின் கீழே, எதுவித அடிப்படை வசதிகளும் அற்றநிலையில், முன்பள்ளி என்ற பெயரில் குறிப்பிட்ட சில மாணவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டப்படுகிறது. இதற்குக்கூட இதுவரை எவரும் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் தேவஸ்தானத்தில் மின்விளக்குகள் ஒளிர்ந்தால்தான் - இவர்களது குடிசைகள் ஒளிபெறும் (மிக அண்மையிலே மேற்படி கோயில் இருப்பது குறிப்பிடத்தக்கது).

குப்பிவிளக்குகளில் தமது குடிசைகளில் வாழ்வுச் சக்கரத்தை நகர்த்திச்செல்லும் மக்களுக்கு, பொதுவாக மலசலகூட பாவனையே தெரியாது என்றே கூறவேண்டும். அந்தளவிற்கு எந்தவொரு வீட்டிலும் நிரந்தரமான மலசலகூடங்களோ அல்லது தற்காலிக மலசலகூடங்களோ இல்லை.

இந்த விடயத்தில் இவர்களுக்கான பூரண விளக்கமின்மையே காரணமாகும். உரியவர்கள் ஆலோசனைகளை, உரியமுறையில் வழங்கினால், தற்காலிக மலசலகூடங்களையாவது இவர்கள் அமைத்துப் பாவிப்பார்கள்.

கால்நூற்றாண்டாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வரும் இந்தக் கிராம மக்கள் - தங்களால் இயலுமானவரை உரிய அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு, தமது நிலைமைகளைத் தெளிவுபடுத்தியபோதும், ஒருவரும் இவர்களின் பிரச்சினைகளை இதுவரை காதில் எடுத்ததாகத் தெரியவில்லை.

புனிதநகர் கிராம மக்கள் - தாம் எதிர்பார்ப்பது எல்லாம் தேவைக்கதிகமான வசதிகளை அல்ல. அடிப்படை வசதிகளையே எதிர்பார்க்கின்றனர். அதிலும் தமக்கான போக்குவரத்துப் பாதையைச் சீர்செய்ய உதவுமாறு கேட்கின்றனர்.

இந்தக் குடியிருப்பில் வாழும் மக்கள் - இதுவரை தீண்டத்தகாத ஆட்களாகவே நடத்தப்பட்டு வருவதினை அவதானிக்கமுடிகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

பொது அமைப்புக்கள், உதவி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள்- இனிமேலாவது தங்களது பார்வையைப் புனிதநகர் குடியிருப்புக்கள் மீது திருப்பவேண்டும். இவ்வாறான பார்வை மூலமாகவே இங்குள்ளவர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

உரியவர்கள் - உரியமுறையில் பாரபட்சமின்றி உதவிகளை வழங்குவதுபோல, இனிவரும் காலங்களில் தங்கள் பட்டியலில் இந்தக் கிராம மக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடு செயல்வடிவம் பெற்றால், இருளில் உள்ள கிராமம் ஒளிபெறும். இவை எந்தளவில் செயல்வடிவம் பெறும் என்பதே கேள்விக்குறி.

**விஜேந்திரன்**

# அரிய திரைப்படங்களும் எமது அருமை ரசிகர்களும்

திரைப்படங்கள் என்பவை வெறும் களிப்பூட்டும் பொழுபோக்குகள் எனக் கருதப்படும் அறியாமை, இன்றும் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு சூழ்நிலையில், திரைப்படம் அல்லது சினிமா பற்றிய ஒரு அறிவார்ந்த பார்வையையும், இது ஒரு கட்புலன் சார்ந்த கலை என்றும் புரிதல் உடையவர்கள் ஆங்காங்கே நல்ல திரைப்படங்களை தேடிப்பார்ப்பவர்களாகவும், சினிமா ஊடான நன்மை தரும் அம்சங்களை பகிரந்து கொள்ள அவாவுகின்றவர்களாகவும் இருப்பது ஆறுதல்தரும் ஒரு விடயம்.

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புக்கள் அலகு சார்ந்தவர்களின் நல்லெண்ணத்தாலும், ஆர்வத்தாலும் திரைப்படத்துறையில் ஆர்வமுள்ள சில கலைஇலக்கிய ஆர்வலர்கள் ஒன்றிணைந்து, வாராந்தம் யாழ். பல்கலைகழக புவியற்பீடப் பிரிவில், நல்ல திரைப் படங்களைக் காண்பித்து வருகிறார்கள் என்பது மிகப்பலருக்கு தெரியத ஒன்று. பிரதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு காண்பிக்கப்படும் இந்தத் திரைப்படங்கள்- இலவசமாகக் காண்பிக்கப்பட்டும் கூட, மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்களே இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறார்கள்.

நல்ல தமிழ் திரைப்படங்கள் மாத்திரமல்லாமல், பிறமொழித் திரைப்படங்களும் ஆங்கில உப தலைப்புகளுடன் காண்பிக்கப்படுகின்றன. சர்வதேச புகழ் வாய்ந்த உயர்ந்த விருதுகள் பலவற்றை வென்ற பல திரைப்படங்கள், இதுவரை காண்பிக்கப்பட்டுள்ளன. பல ரசிகர்கள் அந்தக் காட்சிகளின் ஊடாகத்தான் சத்தியஜித்ரேயையும், மிருநான் சென்னையும், அடூர் கோபாலகிருஸ்ணனையும் அறிந்து கொண்டார்கள். விருதுபெற்ற மிகச் சிறந்த சிங்களப் படங்கள்கூட பார்க்கக் கிடைத்தன. திரைப்படங்கள் காண்பிக்கப்படுவதோடு, படங்கள் பற்றிய கலந்துரையாடல்களும், கருத்துப்பரிமாற்றமும் இடம்பெறுவது மிகவும் பயன்தரும் விடயம்.

தொடர்ந்தும் இந்த நல்ல கலைச் சேவை நடைபெறுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளும் தளிர்த்து வருகின்றன. ஆனால், எமது சினிமா ஆர்வலர்கள் நல்ல சிறந்த தரமான பயன்மிக்க கலா அனுபவத்தைத் தர வல்ல படைப்புக்களைத் தேடிப்பார்ப்பவர்களாக இல்லை. சும்மா பொழுதுபோகவெனக் கடலை கொறித்தபடி பார்க்கும் தன்மை உள்ளோரே பெரும்பான்மையினராக இருப்பது வருந்தத்தக்கவிடயம்

கடந்த 07-12-2003 அன்று காலை நாசரின் படைப்பாகிய தேவதை காண்பிக்கப்பட்டது. வழமைபோல படம் முடிவுற்றபிறகு, பார்வையாளர்கள் உடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. வித்தியாசமான தரமான கலைப் படைப்புக்கள் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியும், அத்தகையவற்றைப் படைப்போரின் நோக்கங்கள், அனுபவங்கள் பற்றியும் கலந்துரையாடல்மூலம் தெளிவு கிடைத்தது.

தொடர்ந்தும் இத்தகைய நல்ல படைப்புகளோடு, பரிச்சையம் கொண்டவர்களுக்குச் சினிமா என்னும் கலையின் ஆழ அனுபவங்கள் பற்றியும், தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்துகுவியும் கலர் குப்பைகள் சினிமா என்றும், அரிய ஊடகத்தை எப்படிக் கொச்சைப் படுத்துகின்றன என்பது பற்றியும் ஒரு நல்ல தெளிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நல்ல சினிமா பற்றி தெளிவு ஏற்படாதபட்சத்தில், நமது இளைய சமூதாயம் எதிர்காலத்தில் தங்கள் சொந்த வாழ்க்கையையே அபத்தமாக மாற்றிக் கொள்ளும் ஆபத்து - சினிமாவால் ஏற்பட நிறைய வாய்ப்பு இருக்கிறது. விழித்துக் கொள்வார்களா ரசிகர்கள்.

**தரிசனன்**

# ஆட்டிறைச்சிக் கடை இடமாற்றத்தினை எதிர்த்து ஆணையாளருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

ஆட்டிறைச்சிக் கடையொன்றை இடமாற்றும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ். முஸ்லிம் சமூகத்தவர்களால் - யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது -

கடந்த 38 வருடங்களாகக் குறித்த ஆட்டிறைச்சிக்கடை யாழ். ஜின்னாவீதியில் இயங்கிவந்தது. அடுத்தவருடம் தொடக்கம் இந்தக் கடையை நடத்துவதற்கு அனுமதி பெற்ற நபர் - கோம்பையன் மயானப்பகுதிக்கு அருகிலுள்ள ஆறு கால்மடப் பகுதிக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இதனால், யாழ். முஸ்லிம் சமூகத்தினரின் மாமிசத் தேவைகளைப் பூர்த்திசெய்வது கடினமாகவுள்ளதாகத் தெரிவித்தே, இந்த மகஜர் மாநகரசபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பழைய இடத்திலோ அல்லது மானிப்பாய் வீதியின் ஐந்து சந்திக்கு அண்மையாகவோ இந்தக் கடையை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் இந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

(ச)

# சதாம் கைது குறித்து பல்வேறு கருத்துக்கள்

## உலக நாடுகள் வெளியிட்டுள்ளன



சதாம் மறைந்திருந்ததாகக் கூறப் படும் இடம்.

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேன் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக பலதரப்பிலிருந்தும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அனேகமான அரபு நாடுகள் - சதாமை போர்க்காலக் குற்றவாளியாக நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளன.

மேலும் சில அரபு நாடுகள் இவர் கைது செய்யப்பட்டமையை ஆதரித்த போதிலும், அமெரிக்கப் படையினரிடம் எதுவித எதிர்ப்பும் காண்பிக்காது சதாம் பிடிபட்டமைக்கு விசனம் தெரிவித்துள்ளன.

சதாம் கைதுசெய்யப்பட்டமைக்கு - சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் மக்கள் தமது மகிழ்ச்சியையும், பிடிபட்டது உண்மையான சதாம் தானா என்ற சந்தேகத்தையும் தெரிவித்தனர். மேலும், இறுதிவரை அமெரிக்கப் படையினருக்கு எதிராகப் போரிடாது சரணடைந்ததன் மூலம் அரபு மக்களை ஏமாற்றிவிட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.



சதாம் கைதான செய்தியைக் கேள்விப் பட்டு குவைத் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேலுக்கு எதிராக சதாம் காட்டிய எதிர்ப்பினால் பலஸ்தீனமக்களிடையே - சதாம் ஒரு துணிச்சல்மிக்க தலைவராக கருதப்பட்டிருந்தார். இதனால் இவர் கைதுசெய்யப்பட்ட செய்தி பலஸ்தீனர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்யாவில் நடைபெற்ற சண்டையில் ஒன்பது பேர் பலி



ரஷ்யக் குடியரசு மாநிலமான டகெஸ்றன் மாநிலத்தின் எல்லையில் செச்சினியப் போராளிகளுக்கும் ரஷ்யப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் 9 பேர்வரை கொல்லபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற பின்னர் செச்சினியப் போராளிகள் டகெஸ்றன் மாநிலத்துக்குள் புகுந்து மக்கள் சிலரை பணயக் கைதிகளாகக் கடத்திச்சென்றுள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் ரஷ்யப் படையினர் தற்போது ஈடுபட்டுள்ளதாக ரஷ்யத் தொலைக்காட்சி தெரிவித்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக ரஷ்ய உள்நாட்டமைச்சர் ரோமன் செச்சிக்கோசிக்கின் தெரிவித்தார்.

1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் செச்சினியப் போராளிகள் இரு டகெஸ்றன் கிராமங்களை முற்றுகையிட்டு, அவற்றை செச்சினியாவுடன் இணைந்த பகுதி எனவும், செச்சினியா ஒரு சுதந்திரநாடெனவும் பிரகடனப்படுத்தியிருந்தது. இதனால் ரஷ்ய படையினருக்கும் செச்சினியப் போராளிகளுக்கும் இடையே போர் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கொலை முயற்சியிலிருந்து தப்பினார்




பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து தனது வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த நேரத்தில் முஷாரப்பின் வாகனத் தொடரணி பாலமொன்றைக் கடந்த சில செக்கன்களில் குண்டுவெடித்தது. இதன்போது அப்பாலம் முற்றாக சேதத்துக்குள்ளானது. எனினும், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

குண்டுவெடிப்பு நடைபெற்ற பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி முஷாரப்பை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காராச்சியில் உள்ள பிரதான வீதியூடாகச் முஷாரப் பயணித்துக்கொண்டிருந்தவேளை, வெடிமருந்து நிரப்பிய வண்டியின் மூலம் தாக்குதல் மேற்கொள்ளவிருந்த திட்டம் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் படையினர் மீது குவைத்தில் தாக்குதல்!



குவைத்தில் அமெரிக்கப் படையினரின் வாகன அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 4 படையினர் காயமடைந்தனர். கவச வாகனமும் இத்தாக்குதலில் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் குவைத்தின் தென்பகுதியில் இடம்பெற்றுள்ளது. குவைத் மக்கள் சதாம் ஹுசேன் கைது செய்யப்பட்டமையை கொண்டாடிக்கொண்டிருந்தவேளையே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டது.

1991 ஆம் ஆண்டு சதாம் ஹுசேன் குவைத் மீது படையெடுத்த பின்னர், அந்த நாட்டின் பாதுகாப்புப் பணியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

## சதாம் கைதானதன் பின்னர்

## இரு தற்கொலைத் தாக்குதல்கள் 10 பேர் மரணம்; 4 பேர் படுகாயம்!

பாக்தாத்தில் அமைந்துள்ள இரு பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும், 4 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் மீது நடைபெற்ற தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, அமிரியா என்ற நகரில் நடைபெற்ற பிறிதொரு தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். 4 பேர் காயமடைந்தனர். இந்தப் பிரதேசத்தில் நடத்த திட்டமிட்டிருந்த மற்றொரு தாக்குதல் முயற்சியை தாம் முறியடித்துவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரியான மொஹமட் இந்தத் தாக்குதல் தொடர்பாகத் தெரிவிக்கையில்,

தான் பொலிஸ் நிலையத்தின் வெளியே நின்றதாகவும், தம்மை நோக்கி வேகமாக ஓர் கார் வந்ததாகவும், அதனைத் தடுத்து நிறுத்த முற்பட்டபோது - அந்தக் கார் வெடித்துச் சிதறியதாகவும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை, சாதாம் ஹுசேன் கைது செய்யப்பட்ட பின்னர் அமெரிக்காவின் ஈராக்கிற்கான நிர்வாக அதிகாரியான போல்பிறிமர் சதாம் ஆதரவாளர்களை ஆயுதங்களைக் கைவிடுமாறு கேட்டுள்ளார். எனினும், அமெரிகப் படையினருக்கு எதிரான தாக்குதல் அதிகரித்துவருவதாகத் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்னால் தி.மு.க மறியல்; லட்சக்கணக்கானோர் கைது!

பொடா சட்டத்தை ரத்துசெய்யவேண்டுமெனவும், தமிழை செம்மொழியாகவும், மத்தியில் ஆட்சி மொழியாகவும் அறிவிக்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் தி.மு.கவினர் நேற்று மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியற்போராட்டம் நடத்தினர்.

இதன்போது, முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் உட்பட 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

சென்னையின் இரு இடங்களிலும், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மறியற்போராட்டம் நடத்தப்பட்டது. சைதாப்பேட்டையில் நடைபெற்ற போராட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி தலைமை தாங்கினார். மெமோரியல் ஹோல் பகுதியில் நடந்த போராட்டத்திற்கு சற்குணபாண்டியன் தலைமை தாங்கினார்.

இருவரின் தலைமையிலும் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான தி.மு.க தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன், மதுரையில் மு.க.ஸ்டாலின், தஞ்சையில் கோ.சி.மணி, சேலத்தில் வீரபாண்டி ஆறுமுகம், கோவையில் துரைமுருகன், திருச்சியில் கே.என்.நேரு, திருவண்ணாமலையில் பிச்சாண்டி, விழுப்புரத்தில் பொன்முடி, நாகர் கோவிலில் சுரேஷ்ராஜன் உட்பட முன்னாள் அமைச்சர்கள் பலரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட எவரும் பிணை கோரமாட்டார்கள் என்று தி.மு.க ஏற்கனவே அறிவித்திருந்தது. கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் சிறைகளில் அடைக்கப்பட்டனர். சிறைகளில் போதிய இடமில்லாத காரணத்தால் பெரும்பாலானவர்கள் கல்யாண மண்டபங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மறியற்போராட்டம் அமைதியாக நடைபெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் அழகிரியால் ஓரங்கட்டப்பட்ட ஸ்டாலினுக்கு கட்சியில் மீண்டும் முக்கியத்துவத்தை ஏற்படுத்த மதுரையில் நடைபெற்ற போராட்டத்திற்கு ஸ்டாலினை - கருணாநிதி களமிறக்கியதாகக் கூறப்படுகிறது.

மறியற்போராட்டம் நடத்தவேண்டாம். மாறாக பேரணி நடத்தலாம் என்று - உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தநிலையிலும், தி.மு.கவினர் திட்டமிட்டபடி மறியற்போராட்டத்தினை நடத்தியமையால் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

## தி.மு.க நடத்தும் மறியற்போராட்டம் கூட்டணிக்கு ஆரோக்கியமானதல்ல!

### பா.ஜ.க தலைவர் வெங்கையா நாயுடு

(புதுடெல்கி)

மத்தியில் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து கொண்டே மத்திய அரசை எதிர்த்து தி.மு.க போராட்டம் நடத்துவது சரியல்ல என, அந்தக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு கூறினார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்,

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க தனித்து 300 இடங்களைக் கைப்பற்ற முயற்சிக்கும். அதேபோல், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு இடம் கிடைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

சமீபத்திய சட்டசபைத் தேர்தல்களுக்குப் பிறகு பா.ஜ.கவின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. அனைத்துத் தரப்பு மக்களாலும் விரும்பப்படும் கட்சியாக பா.ஜ.க மாறியுள்ளது.

காங்கிரஸ் கட்சி மக்களால் நிராகரிக்கப் பட்டுவிட்டது. ஆனால், அதை மறைக்கும் விதமாக அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்றுகூறி மக்களை திசைதிருப்பப் பார்க்கிறார் சோனியா.

காங்கிரஸ் அல்லாத, பா.ஜ.க அல்லாத 3ஆவது அணியை அமைக்கவேண்டும் என்று ஜெயலலிதா கூறுகிறார். என்னைப் பொறுத்த வரையில் பா.ஜ.க முன்னேறிக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்த நிலையில் மூன்றாவது அணிக்கு வாய்ப்பே இல்லை.

பொடாவை எதிர்த்து மத்திய அரசுக்கு எதிராக தி.மு.கவின் மறியற்போராட்டம் தேவையற்றது. இது ஆரோக்கியமானதல்ல. இதை ஏற்கனவே தலைமைக்குத் தெரிவித்துள்ளேன். போராட்டத்தைக் கைவிடுமாறு மறுபடியும் நான் கோரப்போவதில்லை.

வைகோவின் வழக்கை பொடா மறு ஆய்வுக்குழு பரிசீலனை செய்துவருகிறது. அது முடிந்தவுடன் விரைவில் அவர் விடுதலை செய்யப்படுவார் எனவும் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டும்!

## கூட்டணியின் செயலாளர் சம்பந்தன் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் அதிக பிரநிதித்துவத்தைப் பெறுவதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் ஒன்றுதிரளவேண்டும் என, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை கிளைக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் முறுகல் தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்குமானால் தமிழர்கள் ஒரே அணியில் இணைந்து செயற்படுவதையே விடுதலைப் புலிகளும் விரும்புவார்கள் எனவும் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் பொருந்திய நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

போர்நிறுத்தமும் உரியமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. தற்போது அரசியல் நெருக்கடி ஏற்பட்டதையடுத்து, சமாதானத்தை முன்னெடுப்பதில் கடினமான நிலை ஏற்பட்டதையடுத்து சமாதானப் பேச்சு தடைப்பட்டுள்ளது. சமாதான முன்னெடுபுக்கள் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதனாலேயே முறிந்துபோனது எனவும் அவர் தெரிவித்தார். (01)

### நாற்சந்தி

"கடைசியிலை சதாம் ஹுசைன் நிலை இப்படி ஆகுமென்று நினைக கேல்லை"

"ஓமாம் உயிரோடு பிடிபட்டிருக்கவே கூடாது. சண்டைபிடித்து செத்திருக்க வேண்டும்... அல்லது உயிரோடு பிடிபடாமல் கௌரவமாக தற்கொலையாவது செய்திருக்க வேண்டும்..."

"சரியாச் சொன்னாய் அதுதான் ஒரு வீரனுக்கு அழகு..."

"இதாலை புஷ்தான் பிழைத்துக்கொண்டார்..."

"நீ... என்ன சொல்கிறாய்..."

"ஈராக் நடவடிக்கைக்குப் பிறகு புஸ்வாணமாகிப்போய்க்கொண்டிருந்த புஷ்ஷின "காத்து" முழுவதும் போகாமை தப்பீட்டுதெல்லே..."

"அதுசரி... சதாம் ஹுசைனின் எதிர்காலம் என்னவாயிருக்கும்...?"

"இனி அவருக்கு எதிர்காலம் இல்லை... அவர் மீண்டும் வரமாட்டார். என்றெல்லே...அமெரிக்கா சொல்லியிருக்காம்..."

"அப்ப அவரின் கதை காலி என்று சொல்லு... அதுசரி அமெரிக்கா விட்டை சிக்கிய நாடே காலி என்றால் ஆளின் நிலையை என்னென்று சொல்வதாம்...?"

"உனக்கெப்படி இதெல்லாம் தெரியுமாம்...?"

"எல்லாம் கடந்தகாலச் சம்பவங்கள் கற்றுத்தந்த அனுபவம் தான்"

"இனி அமெரிக்காவை அசைக்கேலாது பார்..."

"ஏனடாப்பா இனி பின்லேடனை மறந்திட்டாயே... சதாம் ஹுசையினைவிட அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் அச்சுறுத்தலான ஆள் அவர் தானே...!"

"ஓமடாபபா அந்த ஆள் அந்தக்காலத்து மாயாவி மாதிரி... எங்கையிருக்குது... எங்கைபோகுது... என்ன செய்யுது... என்ன செய்யப்போகுது என்று ஒண்டுமே தெரியேல்லை...கனகண்ணை..."

"அது தானே அமெரிக்கக்காரனுக்கு இப்ப நித்திரையில்லாமல் வருத்துற விடயம்..."

-தெருவாசி

### கலந்துரையாடல்

சூழல்பாதுகாப்பு உரிமம் வளங்கள் மற்றும் தீர்மானம் எடுத்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று பி.ப.2மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி உப பணிமனையில் நடைபெறவுள்ளது.

### துடுப்பாட்டம்

யாழ்பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிகபீட சிரேஷ்ட மாணவர்களுக்கு இடையிலான சிநேகபூர்வ துடுப்பாட்டப்போட்டி நாளை புதன்கிழமை பி.ப.3.30 மணியளவில் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ஆவணங்களைப் பெறத்தவறியோர் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

## யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் விசேட சேவையின்போது ஆவணங்களைப் பெறாதவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் தமது ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு, யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்ட விசேட சேவையின் மூலம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலருக்கு சாரதி அனுமதிப் பத்திரங்கள், வாகன அனுமதிப் பத்திரங்கள் மற்றும் வாகன இலக்கத்தகடுகள் என்பன வழங்கப்பட்டன.

எனினும், மேலும் ஆயிரக்கணக்கான ஆவணங்கள் உரியவர்களால் பெறப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன. அவற்றை எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அடுத்த வருடம் ஜனவரி 31 ஆம் திகதிவரை வழங்கவுள்ளோம்.

வேலை நாட்களில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரை இந்த ஆவணங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இந்தக் காலப்பகுதிக்குள் ஆவணங்களைப் பெறாதவர்களின் உடமைகள் கொழும்புக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல்...

வில்லை.

நேற்றும் - மனோ, மலிக் குழுவினர் சந்தித்து பேசியபோதிலும், இருவருக்கும் இடையில் அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக சந்தித்தபோதிலும் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இந்தச் சந்திப்பின்போது அடுத்த சந்திப்பை எப்பொழுது நடத்துவது என்று தீர்மானிக்கப்படவில்லை.

இதேவேளை ஜனாதிபதியின் மேலதிக ஆலோசகர் மனோதித்தவெல வெளிநாடு ஒன்றுக்கான சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதால் அடுத்த சந்திப்பு தாமதமடையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்த திகதி ஒன்றை ஜனாதிபதி எதிர்வரும் வெளிக்கிழமைக்குப் பின்னர் அறிவிக்கலாமென ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (01)

## மிதிவெடி வெடித்ததில்...

சாவகச்சேரி சிவன்கோயிலடியில் உள்ள செ.சிவஞானம் என்பவருக்கு சொந்தமான காணியில் துப்பரவுப் பணியில் ஈடுபட்டுள்ள மேற்படி நபர், பூவரசம் தடியொன்றை வெட்டி வீழ்த்தியபோது அது மிதிவெடியின் மீது பட்டு மிதிவெடிவெடித்துள்ளது. ஆனால் தெய்வாதீனமாக அன்று எவருக்கும் காயமேற்றபடவில்லை.

சம்பவ இடத்திற்கு வந்த படையினர் அந்த வளவை சோதனையிட்டதில் பத்துக்கு மேற்பட்ட மிதிவெடிகள் வெடிக்கத்தக்க நிலையில் மீட்கப்பட்டன. இதனையடுத்து துப்பரவு பணியில் எவரையும் ஈடுபடவேண்டாம் என படையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

இதன்பின்னர் நேற்று அந்த வளவினுள் துப்பரவு பணியில் ஈடுபட்டபோது மிதிவெடி வெடித்திலேயே அருணாசலம் என்பவர் தனது காலை இழந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். (29,34)

## ஆயிரத்து...

நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா,

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஆசிரிய சேவை ஆட்சேர்ப்புக்கான வயது எல்லையை 30 இலிருந்து 35 ஆக உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் -

உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு வசதியாக அவற்றைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# அரசாங்கத்திற்கு எதிராக புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் தங்கியுள்ள மக்கள் தமக்கு புனர்வாழ்வுக்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து புனர்வாழ்வு அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்வரும் வியாழக்கிழமை புத்தளத்தில் நடத்தவுள்ளனர்.

கடந்த மூன்றுமாதங்களாக நிவாரணம் எதுவும் வழங்கப்படுவதில்லை. இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு தொடர்ந்தும் வேலைவாய்புக்களை பெற்றுக்கொடுக்காமை ஆகிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவிருக்கின்றது.

கடந்த 4ம் திகதி பிரதமர் புத்தளத்துக்கு விஜயம் செய்தபோது இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது. பிரதமர் இதனை நிறைவேற்றுவதற்கு மூன்றுநாள் அவகாசம் வேண்டும் எனக்கேட்டிருந்தார். எனினும் இந்த உறுதிமொழி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (01)

## நாடாளுமன்றம் செல்ல...

வது குறித்த விவாதமும், வாக்கெடுப்பும் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறுகிறது. இந்த விவாதத்தில் கலந்துகொள்ள தன்னை அனுமதிக்கவேண்டுமெனக் கோரி, பொடா சட்டத்தின்கீழ் கடந்த பல மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ பொடா சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

ஆனால், இவரது மனுவை பொடா நீதிமன்ற நீதிபதி நிராகரித்திருந்தார். இதனையடுத்து உயர் நீதிமன்றத்தில் வைகோ மேன்முறையீடு செய்திருந்தார். உயர் நீதிமன்றத்தில் நேற்று நடந்த விசாரணைகளில் வைகோ நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது என்றும், அவ்வாறு அனுமதி வழங்கினால் வைகோ மீதான வழக்கு விசாரணை பாதிக்கப்படுமென்று - தமிழக அரசு சார்பில் வாதிடப்பட்டது. எனினும், சென்னை உயர் நீதிமன்றம் நேற்று வைகோவுக்கு நாடாளுமன்றக் கூட்டதொடரில் கலந்துகொள்ள அனுமதி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## அதிரடிப்படை முகாம்...

நேற்றைய இந்த சந்திப்புத் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது.

விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமுகமான உறவைப் பேண வேண்டும் என இணக்கம் காணப்பட்டதாக அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவர் கிறிஸ்ரோ உசான தெரிவித்தார்.

நேற்று அம்பாறை மாவட்டத்தில் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவன் ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் அக்கரைப்பற்று போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த இணக்கம் காணப்பட்டது.

இக்கூட்டம் நேற்றுக்காலை 10 மணிமுதல் 12 மணிவரை நடந்தது. இந்தக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையில் ஆறுபேரும், விசேட அதிரடிப்படையின் சார்பில் விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன தலைமையில் எட்டுப்பேரும் கலந்துகொண்டனர்.

## புலிகளின் மணிராசன்குள...

பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் அவர்கள் தற்போது மௌனம் சாதிக்கின்றனர். புலிகளின் மணிராசன்குள முகாமிற்கு ஆர்ப்பாட்டம் நடத்திச் சென்ற சிஹல உறுமய குழுவினர் தற்போது ஏன் அவ்வாறான ஒரு ஆர்ப்பாட்டத்தைச் செய்யவில்லை?

தேசியவாதிகள் என்று ஜனாதிபதியும், ஜே.வி.பியினரும் அண்மையில் நடந்த கிண்ணியா அசம்பாவிதங்கள் தொடர்பாக ஏன் மௌனம் காத்தனர்? இதன்மூலம் அவர்கள் விடுதலைப் புலிகளை சாந்தப்படுத்த நினைக்கிறார்கள்?

விடுதலைப் புலிகளின் திட்ட வரைபு பற்றி கலந்துரையாடுவதற்கு தான் தயார் என ஜனாதிபதி பொது இடங்களில் கூறிவருகின்றார். அவர் மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்ற பின்னரேயே இவ்வாறு கூறுகின்றார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் கொலைகளும், பாலியல் துன்புறுத்தல்களும் அதிகரித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் நான்காம் திகதியிலிருந்து இந்த மாதம் நான்காம் திகதி வரையான ஒருமாத காலத்திற்குள் நாட்டில் 64 கொலைகள் நடந்துள்ளன. அத்துடன் இதே காலப்பகுதியில் பொலிஸ் நிலையங்களிலும் விடுதிகளிலுமாக 94 கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலவச கணனிக் கருத்தரங்கு

கணனி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

காலம் 26/12/2003 - 31/12/2003 (9.00 AM to 4.00 PM)

யாருக்கு
- பாடசாலை மாணவர்கள் (O/L & A/L)
- அரச தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள்.
- பெற்றோர்கள்.

கணனிப் பட்டதாரிகளடங்கிய அனுபவம் மிக்க விரிவுரையாளர்களின் இணைந்த சேவையின் கீழ் 6 நாட்கள் நீங்கள்.

உள்ளடக்கம்:
- Computer Systems & Systems Engineering
- Information Technology
- Computer Applications (including MS Office)
- e-mail & Internet Technology
- Computer Programming (VB, C++/ Java)
- Database Management
- Data Communicatio and Networking

கருத்தரங்கினூடான புலமைப்பரிசில்கள்

இப்பயிற்சி முடிவில் நடாத்தப்படும் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு எமது பாடநெறிகளில் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

இன்றே உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

பதிவுகளிற்கு

73, Palaly Road, Kantharmadam.
Branch: Sankaththanai, Chavakachcheri STP
Your Partner in IT Solution T.P:2222674

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.